Registered as a Newspaper




# உதயன்

விலை ரூ 2/-




ஏடு: 4 யாழ்ப்பாணம் விபவ ஹூ கார்த்திகை மீ 27 உ. திங்கட்கிழமை ஹிஜ்ரி 1409 ஜ அவ்வல் பிறை 2 ( 12 - 12 - 1988 ) UTHAYAN-A lively Tamil Daily கதிர்: 15

## போகம்பரைச் சிறையிலிருந்து 5 தீவிரவாதிகள் விடுவிப்பு

கொழும்பு டிச 12 கண்டி, போகம்பரைச் சிறைக்குள் நுழைந்த தீவிரவாதிகள் குழு ஒன்று 5 தீவிரவாதச் சந்தேக நபர்கள் தப்பிச் செல்ல உதவியதுடன், ஆயுதங்களையும் அபகரித்துச் சென்றது.

நேற்று முன்தினம் இரவு இராணுவச்சீருடை அணிந்த25பேர்கொண்ட இந்தக் குழு போகம்பரைச் சிறைக் காவலாளரைத் துப்பாக்கியைக் காட்டிப் பயமுறுத்தி விட்டு உள்ளே நுழைந்தது.

அங்கு காவலில் வைக்கப்பட்டிருந்த 5 தீவிரவாத சந்தேக நபர்களைக் குழுவினர் விடுவித்தனர்.

பின்னர் 41 துப்பாக்கிகள், ஆயிரம் சுற்றுரவைகள் மற்றும் கண்ணீர்ப் புகைக் குண்டுகள் ஆகியவற்றை இவர்கள் அபகரித்துக் கொண்டு சென்றனர். (இ-எ)

### தேர்தல் கண்காணிப்பு குழுவில் சார்க் அமைப்பு நாடுகளைச் சேர்ந்த 10பேர்

கொழும்பு, டிசம்பர் 12

ஜனாதிபதித் தேர்தலைக் கண்காணிக்கும் குழுவில் சார்க் அமைப்பு நாடுகளைச் சேர்ந்த 10 பேர் நியமிக்கப்பட்டனர்.

இடம் பெறும் உறுப்பினர்கள் விவரம் வருமாறு;

1. பங்களாதேஷ்: முன்னாள் வெளியுறவு அமைச்சர் டாக்டர் கமல் ஹுசேன், முன்னாள் சட்டமா அதிபர் இஷ்ரியாக் அஹ்மத், உயர் நீதிமன்ற முன்னாள் பிரதம நீதியரசர் பக்ருதீன் அஹ்மத்.

2. பாகிஸ்தான்: மனித உரிமை இயக்கத் தலைவர் தோராப் பட்டேல், பிரபல வழக்குரைஞர் அபிட் ஹஸன் மின்ரோ, சிரேஷ்ட பத்திரிகையாளர் அஸிஸ் சித்திக்.

3. இந்தியா: முன்னாள் வெளியுறவு அமைச்சுச் செயலாளர் ராஜேஸ்வர்

[6 ஆம் பக்கம் பார்க்க]

புதன்கிழமை முதல்

# குடாநாட்டில் ஊரடங்கு
# 2 மணி நேரம் தளர்வு

## மீனவர் தொழில் நேரமும் நீடிப்பு

### யாழ். கூட்டத்தில் முதலமைச்சர் வரதராஜப்பெருமாள் அறிவிப்பு

யாழ்ப்பாணம், டிசம்பர் 12

✶ யாழ்ப்பாண மாவட்டத்தில் இப்போது அமுலில் இருக்கும் ஊரடங்குச் சட்டம், நாளை மறுதினம் புதன்கிழமை தொடக்கம் இரண்டு மணித்தியாலங்கள் தளர்த்தப்படும். அதாவது இரவு 7 மணிக்குப் பதிலாக ஒன்பது மணிக்கு அமுல் செய்யப்படும்.

✶ குடாநாட்டு மீனவர்கள் புதன்கிழமையிலிருந்து அதிகாலை 2 மணி முதல் பிற்பகல் 4 மணிவரை கடலில் தொழில் செய்ய அனுமதிக்கப்படுவர்.

✶ இந்திய அமைதிப்படையினரால் கைது செய்யப்பட்டவர்களில், திருந்திக்கொள்ள விருப்பம் தெரிவிப்பவர்கள், திருந்தி ஜனநாயக அமைப்பில் அமைதி வாழ்க்கை வாழ விரும்புபவர்கள் படிப்படியாக விடுதலை செய்யப்படுவர். அதற்கு அடையாளமாக இன்று (ஞாயிறு) ஒன்பது பேர் விடுதலை செய்யப்படுகின்றனர்.

இவ்வாறு வடக்கு—கிழக்கு மாகாணசபையின் முதல் அமைச்சர் திரு. அ. வரதராஜப் பெருமாள் நேற்று அறிவித்தார்;

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மைதானத்தில் நேற்று பிற்பகல் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் பேசுகையிலேயே திரு. வரதராஜப் பெருமாள் அறிவித்தார்.

1. பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்கப்படுவது துரிதப்படுத்தப்படும். இதுசம்பந்தமாக மாவட்ட அரசாங்க அதிபர்களுடன் தொடர்பு கொண்டு வேலைகளை விரைவு படுத்துமாறு கூறியுள்ளோம்.

2. தண்டனை விதிக்கப்பட்ட தமிழ்க் கைதிகளை விடுதலை செய்யுமாறு நாம் கேட்டுக்கொண்டதன் பேரில் அவர்கள் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

மேற்கண்ட விவரங்களையும் முதலமைச்சர் திரு. வரதராஜப் பெருமாள் தனது பேச்சின்போது வெளியிட்டார்.

மாகாண சபையின் உறுப்பினரும் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் யாழ் பிராந்தியப்பொறுப்பாளருமான திரு சே. பிறேமச்சந்திரன் கூட்டத்திற்குத் தலைமை வகித்தார்.

பொதுக் கூட்டத்தில் உரையாற்றுகையில் திரு. வரதராஜப் பெருமாள் மேலும் தெரிவித்தவை யாவது;-

எமக்குத் தேவை அமைதி, அபிவிருத்தி, ஜனநாயகம்;

இவற்றை அடிப்படையாக வைத்தே எமது அரசு செயற்படும்.

எவ்வளவு அழிக்கப்பட்டாலும் எமது தேசம் அப்படியே இருக்கின்றது. ஆனால் எமது வளங்கள், எமது நிலங்கள் பயனற்றிருக்கின்றன. அவற்றை நாம் பயன்

(6 ஆம் பக்கம் பார்க்க)

### நகரில் குண்டுவெடிப்பு; கடை தீப்பிடித்தது

யாழ்ப்பாணம், டிச, 12

நேற்று யாழ் நகரில் இடம் பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவம் ஒன்றில் கடை ஒன்று தீப்பற்றி எரிந்தது.

நேற்று நண்பகல் 2 மணி அளவில் இந்தச் சம்பவம் நடைபெற்றது.

யாழ் நகரில் நவீன சந்தைக் கட்டிடத்தில் உள்ள பூட்டப்பட்டிருந்த கடை ஒன்றினுள்ளேயே குண்டு வெடித்தது.

இதனால் கடை தீப்பற்றி எரிந்தது. பொது மக்கள் பலர்தொடர்ந்து மேற்கொண்ட முயற்சியினால் தீ அணைக்கப்பட்டது.

(இ-5)

### முச்சந்தி முரளி



தேர்தல் சூறுவளி ஒன்றினால் மட்டுமே தென்பகுதி அரசியல் வாதிகளை வடக்கே தள்ள முடியும் போல இருக்கு!

### பெரிய குளம் பகுதியில் கொள்ளை

மாங்குளம், டிச 12

மாங்குளத்திற்கும் மன்னாகுளத்திற்குமிடையில் உள்ள பெரிய குளத்தில் இனந்தெரியாதவர்களினால் துப்பாக்கி முனையில் கொள்ளை நடத்தப்பட்டது.

வீதியால் சென்ற பஸ் பிரயாணிகளிடமும், லொறிகளில் சென்று

[6 ஆம் பக்கம் பார்க்க)

### தீவிர சோதனை

யாழ்ப்பாணம், டிச, 12

நல்லூர், முடமாவடி, கல்வியங்காடு பகுதிகளில் நேற்று இந்திய அமைதிப்படையினர் தீவிர சோதனை நடவடிக்கைகளை மேற்கொண்டனர்.

நேற்று முன்தினம் இப்பகுதிகளில் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் இடம்பெற்றன என்பது குறிப்பிடத்தக்கது.

(இ-10)

### தினமும் ரூ. 8 லட்சம் நஷ்டம்

இலங்கை மின்சார சபைக்குத் தினமும் எட்டு லட்சம் ரூபா நஷ்டமேற்படுகிறது.

இலங்கை மின்சார சபை உபதலைவர் திரு. டி. ஆர். சி. டி. அல்விஸ் இதனை தெரிவித்தார்.

(இ-எ)

## இன்று யாழ் வரும் பிரதமர் பிரேமாவுக்குபலத்தபாதுகாப்பு

யாழ்ப்பாணம், டிச 12

பிரதமர் திரு. ஆர். பிரேமதாசாவின் இன்றைய யாழ் விஜயத்தை முன்னிட்டு பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன.

யாழ் மத்திய கல்லூரி மைதானத்தில் இன்று காலை 9 00 மணி அளவில் நடைபெறும் ஐக்கிய தேசியக் கட்சியின் ஜனாதிபதி தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் பிரதமர் உரை நிகழ்த்துவார்.

இதற்காக விசேட ஒலி பெருக்கிச் சாதனங்கள் கொழும்பில் இருந்து கொண்டு வரப்பட்டுள்ளன.

துப்பறியும் நிபுணர்கள் குழு ஒன்றும் ஏற்கனவே யாழ்ப்பாணம் வந்து தங்கியுள்ளதாகத் தெரிகிறது.

இந்தக் கூட்டத்தில் உரை நிகழ்த்துவதற்காக பிரதமர் திரு. ஆர். பிரேமதாச கொழும்பில் இருந்து விமானம் மூலம் பலாலி விமான நிலையத்துக்கு வந்து அங்கிருந்து கோட்டை முகாமுக்கு ஹெலிக்கொப்டர் மூலம் வந்து சேருவார்.

பிரதமருடன் பல முக்கிய அமைச்சர்களும் இராணுவ அதிகாரிகளும் கூட்டத்தில் கலந்து கொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது. (இ-10-5)

### தாயார் அடையாளம் காட்டினர்

யாழ்ப்பாணம், டிச 12

யாழ். கந்தர்மடம் மணல்தறைப் பகுதியில் நேற்று முன்தினம் நடைபெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் மரணமானவர் தெல்லிப்பளையைச் சேர்ந்த சுப்பிரமணியம் பாலச்சந்திரன் (வயது 27) என அடையாளம்காட்டப்பட்டது.

இவரது தாயாரான சுப்பிரமணியம் சின்னம்மா என்பவர் சடலத்தை அடையாளம் காட்டினர்.

### ● முதலாவது பெண் எம். பி. காலமானர்

இலங்கை நாடாளுமன்றத்தின் முதலாவது பெண் எம். பி. என்ற பெருமைக்குரிய திருமதி டெய்ஸி மரியா புளோரன்ஸ் சேனநாயக்கா தனது 85 ஆவது வயதில் கடந்த மூன்றும் திகதி காலமானர்.

1947 ஆம் ஆண்டில் லங்கா சமசமாஜக்கட்சி வேட்பாளராக 1947இல் கிரியெல்ல தொகுதியில் போட்டியிட்டு அவர் வெற்றிபெற்முர்.(இ-எ)

### ஆஸி வெற்றி

உலக கிரிக்கெட் இன்னத்துக்கான போட்டி ஒன்றில் ஆஸ்திரேலியா பாகிஸ்தானை 9 விக்கெட்டுகளால் நேற்று தோற்கடித்தது.

போட்டி அடிலயிற்டில் நடந்தது. (இ-எ)

ஜனாதிபதித் தேர்தலின் போது

## வடக்கு-கிழக்கு பாதுகாப்பு ஒழுங்கு அமைதிப்படையிடம்

கொழும்பு, டிச 12

ஜனாதிபதித் தேர்தலின் போது வடக்கு—கிழக்கு மாகாணத்தில் பாதுகாப்பு ஒழுங்குகளை இந்திய அமைதிப்படை மேற்கொள்ளும்

தகவலறிந்த வட்டாரங்கள் இதனைத் தெரிவித்ததாக சண்டே ரைம்ஸ் செய்தி வெளியிட்டது.

வாக்களிப்பு நிலையங்கள், வாக்கு எண்ணப்படும் நிலையங்கள், பொலீஸ் நிலையங்கள், கச்சேரிகள் மற்றும் முக்கிய இடங்களில் இந்திய அமைதிப்படையினர் நிறுத்தப்படுவர்.

வாக்களிப்பு நிலையங்கள், வாக்கு எண்ணப்படும் நிலையங்கள் ஆகியவற்றில் நிறுத்தப்படும் இலங்கை பொலீஸாருடன் இந்திய அமைதிப் படையினரும் நிறுத்தப்படுவர்.

ஒரு வாக்களிப்புநிலையத்துக்கு ஒரு பொலீஸார் விதமும் ஒரு வாக்கு எண்ணப்படும் நிலையத்துக்கு 16 பொலீஸார் விதமும் நியமிக்கப்படுவர். (இ-எ)

## பணியாற்றுங்கள் அல்லது பதவி விலகுங்கள்

### உதவி [illegible]ரசாங்க அதிபர்களுக்கு முதலமைச்சர் கடும் உத்தரவு

கொழும்பு, டிச 12

பணியாற்றுங்கள் அல்லது பதவி [illegible] இராஜினாமாச் செய்யுங்கள்—

பதுளை மாவட்டத்தில் வேலைக்குச் சமுகமளிக்காமல் இருக்கும் பிரதேச உதவி அரச அதிபர்களுக்கு சப்ரகமுவ மாகாண முதலமைச்சர் [illegible] கடும் உத்தரவு [illegible]திருக்கிறார்.

அண்மையில் நடந்த பதுளை மாவட்ட சிரேஷ்ட அரசு அதிகாரிகள் கூட்டத்தில் பதுளை பதில் அரச அதிபராகப் பதவி ஏற்றுள்ள மேஜர் ஜெனரல் சிசில் வைத்தியரத்தின முதலமைச்சரின் உத்தரவை வெளி

(6 ஆம் பக்கம் பார்க்க)

### ஐவர் கடத்தப்பட்டுக் கொலை!

கொழும்பு, டிச. 12

அனுராதபுரம் மாவட்டத்தில் மகாஇலுப்பலம பண்ணையில் 5 பேர் இனந்தெரியாத நபர்களினால் கடத்திச் செல்லப்பட்டு கட்டுக் கொல்லப்பட்டனர் என்று கொழும்பில் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

உயிரிழந்தவர்களில் ஒருவர் கல்வி அதிகாரி எம். பண்டாரா என்றும் தெரிவிக்கப்பட்டது.

தமிழக சட்டசபைத் தேர்தலில்

## இந்திரா காங்கிரஸ் தனித்துப் போட்டியிடும்

சென்னை, டிச. 12

தமிழ்நாடு சட்டசபைத்தேர்தலில் இந்திராகாங்கிரஸ்தனித்தே போட்டியிடும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது.

தமிழ்நாடு தேர்தலுக்குப் பொறுப்பான இந்திரா காங்கிரஸின் மத்திய நாடாளுமன்றக் குழு உறுப்பினர் திரு. கே. கருணாகரன், மத்திய அமைச்சர் திருமதி ராஜேந்திரகுமாரி வாஜ்பாய் ஆகியோர் நேற்று சென்னையில் செய்தியாளர் மாநாடு ஒன்றை நடத்தினர்;

அப்போதே அவர்கள் இந்த முடிவை வெளியிட்டனர்.

தமிழ்நாட்டில் இந்

6 ஆம் பக்கம் பார்க்க)

### சுப நேரம்

12-12-1988

கார்த்திகை 27

திங்கட்கிழமை

சுப நேரம்:

12 20 முதல் 1.50 வரை

ராகு காலம்:

7.50முதல் 9.20வரை

இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்

சதுர்த்தி விரதம்

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

பாவித்த தளபாடங்கள், கட்டில், Box Spring, மெத்தைகள், மகாராஜா ஹோல் செற், Show Case, கண்ணாடி மேசை, செற்றி, சாப்பாட்டு மேசை, நேசறி Cot, பெரிய குத்துவிளக்கு, Filter, மற்றும் பல மிகவும் மலிவு விலையில் உடன் விற்பனைக்கு உண்டு. M தியாகராஜன், 326, பிரதான வீதி, செனி பற்றிக்ஸ் சந்தி அருகில் யாழ்ப்பாணம் (8097)

உறுப்பாலைய மின்சாரத் தடை காரணமாக எமது வைபிரப்பில் இருந்த விற்பனையாகிய ஜெர்மன் சைப்பம்புகள் (Semi Rotary Pumps) (German) இப்பொழுது விற்பனைக்கு உண்டு. விரும்பியவர்களுக்கு மேற்குறிப்பிட்ட பம்புகள் ஒரு வருட உத்தரவாதத்துடன் பொருத்தியும் கொடுக்கப்படும். சாமுவேல், சன்ஸ் கம்பெனி லிமிட்டட் யாழ்ப்பாணம் (C/910)

டீசல் ஜெனரேற்றர் 7 KVA Petter Engine 3000 RPM Original Condition அதிகம் பாவிக்கப்படாதது. தொடர்பு - மாப்பெறுவும் பிணிதிடனையும், சந்தைச்சதுக்கம், சங்கானை (8211)

பாவித்த ஹோல் செற், Show-case, மேசை, Baby cot, கட்டில் மெத்தை, கண்ணாடி மேசை, Rice - cooker, Multi-cooker, மற்றும் பல உடன் மலிவு விலையில் விற்பனைக்குண்டு திரு. மதியாபரணம், இராமலிங்கம் வீதி திருநெல்வேலி கிழக்கு. முடமாவடி (8092)

Orders Accepted For L M L Vespa Scooter L M L வெஸ்பா ஸ்கூட்டர் வாங்குவதற்கு ஓடர் ஏற்கப்படும் விபரம்:- J P T Ltd 3. நவீன சந்தை (மேல்மாடி) யாழ்ப்பாணம் (8210)

## இசைப்பயிற்சி வகுப்புக்கள்

வட்டுக்கோட்டையில் உள்ள இசைப்பிரியர்களின் வேண்டுகோளுக்கிணங்க கிற்றார், ஓகன், ஆர்மோனியம் வயலின், மிருதங்கம், பரதநாட்டியம் வாய்ப்பாட்டு வகுப்புக்கள் மூளாய் மாத்துவக் கல்லூரிக்கு முன்பாக ஆரம்பிக்கப்படுகிறது. பயில விரும்புவோர் 15-01-89க்கு முன் தொடர்பு கொள்ளவும். சி துரைராசா, 'சற் ... வாசம்' ஆஸ்பத்திரி வீதி மூளாய் சுழிபுரம் 8112

## காணவில்லை

எனது சாரதி அனுமதிப்பத்திரம் Driving Licence) அண்மையில் மானிப்பாய் வீதி அல்லது கண்டி வீதியில் தவறிவிட்டது கண்டெடுத்தவர்கள் தயவு செய்து அறியத்தந்தால் தகுந்த சன்மானத்துடன் வந்து பெற்றுக்கொள்வேன் தொடர்பு K செல்லததுரை (ஆசிரியர்) 56/1 பழைய பூங்கா வீதி, யாழ்ப்பாணம் (8095)

தேவசகாயம் தாசிஸ் ஆகிய எனது அடையாள அட்டை இல, 522320439V, அலுவலக அடையாள அட்டை என்பனவற்றுடன் யாழ் பெருமருங்கக் கூட்டுத்தாபனத்துக்கும் சுபாஸ் ஹோட்டலுக்கும் இடையில் தவறிவிட்டது கண்டெடுத்தவர்கள் உதயன் காரியாலயத்தில் ஒப்படைக்கவும். (8098)

## நத்தார், புதுவருட வாழ்த்து மடல்கள்

திருமண அழைப்பிதழ்கள் (Printing Cards), திருமண வாழ்த்துக்கள், பிறந்தநாள் வாழ்த்துக்கள், நத்தார், புதுவருட வாழ்த்துக்கள் மற்றும் ஏனைய வாழ்த்து மடல்களையும் மொத்தமாகவும் (விசேட கழிவுண்டு) சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம். அரன் ஜுவலியகம், 146, நவீன சந்தை, யாழ்ப்பாணம், (C/357)

## கலண்டர்கள் டயறிகள்

மெய்கண்டான், லீலா, ஆனந்தா, அஷ்டலக்ஷ்மி, தாளயன், கலண்டர்கள், வாக்கிய, திருக்கணித பஞ்சாங்க கலண்டர்கள், மற்றும் Observer, Sivali, உதயாலீலா, இன்னும் பல வகையான டயறிகள் விற்பனையாகின்றன வியாபாரிகளுக்கு விசேட கழிவு வழங்கப்படும். மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம். பூபாலசிங்கம் புத்தகசாலை யாழ்ப்பாணம் (8045)

## தேவை

கண்ணியமான ஓர் சிறிய இந்துசமய வேளாள குடும்பத்திற்கு நல்ல சூழ்நிலையிலுள்ள வீடு விலைக்கு அல்லது வாடகைக்குத் தேவை. தமது வீட்டை நல்ல முறையில் பராமரித்துக் கொடுக்கவும், இனிய சுபாவமுள்ளோர் தமது வீட்டில் துணையாக நல்ல குடும்பத்தை வைத்தால் நன்றாக இருக்கும் என விரும்புவோரும், வெளிநாடு போக உள்ளோரும் தொடர்பு கொள்ளவும் 405, C/o உதயன். (8212)

## மணமகன் தேவை

கொழும்புத்துறை மேற்கைச் சேர்ந்த சைவ வேளாள குலத்தைச் சேர்ந்த விஞ்ஞானப் பயிற்சி பெற்ற 35வயதுடைய ஆசிரியைக்கு தொழில் புரியும் மணமகன் தேவை சீதனம் கொடுக்கப்படும் தொடர்பு: இல 404 மே/பா உதயன் யாழ்ப்பாணம் (8209)

## முகாமையாளர் இடமாற்றம்

மாங்குளம் டிச 12 மாங்குளம் மக்கள் வங்கி முகாமையாளர் திரு கே. தேவராசா யாழ்ப்பாணம் பிரதேச மக்கள் வங்கி அலுவலகத்துக்கு இம்மாதம் 15 ஆம் திகதி முதல் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். இவரது இடத்துக்கு நெல்லியடி மக்கள் வங்கியில் இருந்து திரு தங்கசிவம் மாற்றப்பட்டுள்ளார், (சி-94)

# எட்டாம் ஆண்டு நினைவஞ்சலி



## திரு. சி. சுப்பிரமணியம்

(அதிபர்: வேரப்பிட்டி, சங்கானை, கோண்டாவில், நத்தாட்டை, பலாலி)

பிறப்பு: 3 - 12 - 1922

இறப்பு: 11 - 12 - 1980

திதி: 12 - 11 - 1988


அன்பாய், பண்பாய், பாசமாய் மனைவி மக்களுக்கும் தன்னலங்கருதாத எழிராட்டிய மாணவர்களுக்கும் குறும்பான பேச்சுக்களால் தோழர்கள், சுற்றத்தவர்களுக்கும் உகந்த ஆசானாக வாழ்ந்து இறைபதமெய்திய அன்புத் தெய்வமே! ஆண்டு பலவானாலும் உங்கள் நினைவு எமது உள்ளங்களை விட்டு அகலாது.

மனைவி, மக்கள்,
பேரப்பிள்ளைகள், மருமக்கள்.

பிரபை மஹால்,
உரும்பராய.

(8111)

# மூன்றுவது ஆண்டு நினைவஞ்சலி



## தோழர் பார்த்தீபன் [கண்ணன்]

ஈழமண்ணில்: 09— 10— 1960



## தோழர் விஜயரஞ்சன் [குட்டி]

ஈழமண்ணில்: 08— 10— 1964

ஈழவர் மனங்களில். 12—12—1985

ஈழவரின் இன்னல் கண்டு
ஈழமக்கள் உரிமைகளில் நேசம்கொண்டு
ஐரோப்பிய நாடுகளில் எம்மவர் இழிநிலை உணர்ந்து
புரட்சிகர அமைப்பில் இணைந்து
விடுதலை வேட்கையுடன் செயற்பட்டு
இன்னுயிர் ஈந்த எமபிறப்புகளே
குட்டி, கண்ணா
துயரம் நிறைந்த, உங்கள் இழப்புக்களை
இன்றும் நினைக்கிறோம்
என்றும் எம் நினைவில் நிலைப்பீர்!

மனைவி அப்பா, அம்மா,
நண்பர்கள், தோழர்கள்,
சகோதரர்கள்.
திருநெல்வேலி.

அப்பா அம்மா,
சகோதரர்கள் நண்பர்கள்.
தோழர்கள்.
இருபாலை ... (8100)

# JAFFNA COLLEGE Institute of Technology VADDUKODDAI

'89' ஜனவரியில் புதிய வகுப்புகள் ஆரம்பம்

DIPLOMA IN DATA PROCESSING AND COMPUTER PROGRAMMING

SUBJECTS:

(i) Programming (Basic, Cobol, d Base III+)
(ii) System Analysis
(iii) Data Processing
(iv) Related Mathematics
(v) English
(vi) Accountancy

Practicals on IBM PC, At Machines in A/C Room

கட்டணங்கள் தவணை அடிப்படையில் விண்ணப்பப் படிவங்கள் அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

SELECTION AFTER INTERVIEW

- பணிப்பாளர் -

(C 873)

+ J. M. J

# யோர்தான்

யோர்தான் நாட்டில் பண்ணைத் தொழிலாளர்களாகவும் உதவியாளர்களாகவும் FARM WORKERS and GENERAL HELPERS பணியாற்றுவதற்கு உடனடியாக ஒழுங்குகள் செய்து தரப்படும்.

வளமிக்க யோர்தான் நாட்டில் சிறந்த சம்பளத்துடன் பணிபுரிய

**அரியதோர் சந்தர்ப்பம் இது.**

முதற்குழுவில் இருபது பேர் அடுத்த இருவாரங்களுக்கிடையில் பயணம் மேற்கொள்ளவிருக்கிறார்கள்.

சம்பளம்

600 - 800 அமெரிக்க டொலர்கள்.

**இரண்டு வருட ஒப்பந்தம்**

அமெரிக்க நிர்வாகிகளின் தலைமையில் இயங்கும் ஸ்தாபனம்.

மற்றும்

சகல விபரங்களுக்கும் உடனடியாகத் தொடர்பு கொள்ளுங்கள்.

உங்கள் பயண அமைப்பாளர்:

# எஸ்.பி. அன்ரன்

No. 648 1/3, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

(காப்புறுதிக் கூட்டுத்தாபனத்திற்கு முன்பாக)

(C/898)

# 'M' THREE TRAVEL

பெருமையுடன் வழங்கும்

**உடனடி வேலைவாய்ப்புக்கள்**

கீழ்க்காணும் வெற்றிடங்கள் தற்போது எம்மிடம் உண்டு.

சவூதி:-

21 வயதிற்கு மேல்

| | |
|---|---|
| Mason | — மேசன் |
| Carpenters | — தச்சுத்தொழிலாளர் |
| Generator Operators | — ஜெனறேற்றர் ஒப்பறேற்றர் |
| Genarator Mechanics | — ஜெனறேற்றர் மெக்கானிக் |
| Packing Labourers | — பக்கிங் தொழிலாளர் (ஆங்கிலஅறிவு ஓரளவு அவசியம்) |
| University Cleaners | — சர்வகலாசாலை கிளீனர்கள் |

நம்பிக்கை,நாணயம என்பவற்றிற்கு நீங்கள் நாடவேண்டிய ஸ்தாபனம்:

## 'M' Three Travel

★ புதிதாக கடவுச்சீட்டு செய்பவர்களுக்கு ஒரு கிழமையில் கடவுச்சீட்டு எடுத்துக் கொடுக்கப்படும்.

★★ எங்களிடம் புதுக்கடவுச்சீட்டு செய்பவர்கள் எங்கள் மூலம் வேலைவாய்ப்புப் பெற்றுச் செல்ல விரும்பினால் உடனடியாக விசா செய்து கொடுக்கப்படும்

★ பொன்ட் (Bond) செய்து கொடுக்கப்படும்.

இவை எல்லாவற்றிற்கும் தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி:-

சோதி லேன், கல்லூரி வீதி, காங்கேசன்துறை.

No, 1,2ஆம் ஒழுங்கை, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

(C/908)

# LONDON EXAMS

(MAY — JUNE 1989)

**Commencing 17 th Dec. 89**

● C. I. M. A. STAGES I & II
● A. A. T. ALL STAGES

விரிவுரையாளர் குழு:
V. கருணாநிதி,
S. D சிவஞானம்,
S.பிலிப, S. சிவபாலன்.

"Good Wine needs no bush"

# RAPID RESULTS INSTITUTE

212, Kachcheri - Nallur Road, Jaffna:

(8105)

# மலைக்கோட்டை ரவல்ஸ்

நம்பிக்கை, நாணயம்
துரித சேவை

✱ ஜேர்மனி பயணம்

வெளிநாட்டுப் பயண அமைப்பாளர்:

P. சிவபாதலிங்கம்.
NO. 9 அரசடி ஒழுங்கை,
தட்டாதெரு,
யாழ்ப்பாணம்.

(8110)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சு. க. ஆதரவாளர்கள் கைதாவதாக முறையீடு!

கொழும்பு, டிச 12 அவசரகாலச் சட்ட விதிகளின் கீழ் முக்கிய ஆதரவாளர்கள் பலரை பொலிஸார் கைது செய்திருப்பதாக ஜனதிபதிக்கு சுதந்திரக் கட்சி முறையிட்டிருக்கிறது.

இதைத் தவிர்ப்பதற்கு அவசரகாலச் சட்டத்தின் சில விதிகளை விலக்கிக் கொள்ளும்படி ஜனதிபதி வேட்பாளரான திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவின் பிரதம தேர்தல் ஏஜண்ட் டாக்டர் மகிபாலத்வத்தை, ஜனதிபதிக்கு எழுதிய கடிதத்தில் கேட்டிருக்கிருர். (உ-எ)

## இன்பருட்டியில் பாலர் பாடசாலை

பேருட்ஸ்தாபன ஆதரவுடன் கடந்த புதன்கிழமை இன்பருட்டியில் பாலர் பாடசாலை ஒன்று ஆரம்பித்து வைக்கப்பட்டது

மேற்படி பாலர் பாடசாலையை திரு எஸ் ஆனந்தராசா சம்பிரதாய முறைப்படி ஆரம்பித்து வைத்தார் (ஓ 160)

# சிறிமாவை ஆதரிக்க இடது கம்யூ. கட்சி முடிவு

யாழ்ப்பாணம் டிச 12

இந்த நாட்டையும் மக்களையும் படுநாசத்திற்கு இட்டுச் சென்ற மக்கள் விரோத யூ என். பியை தோற்கடிக்கக் கூடிய ஜனநாயக சக்திகளின் வல்லமை மிக்க ஜனதிபதி வேட்பாளராக திருமதி சிறிமா பண்டாரநாயக்கா விளங்குகின்ருர்.

அதே வேளை அவசார்பாக முன்வைக்கப்பட்டுள்ள பொதுவேலைத் திட்டத்தில் காணப்படும் பல்வேறு அம்சங்கள் நெருக்கடிமிக்க பிரச்சினைகள் பலவற்றுக்கும் குறைந்த பட்ச தீர்வையாவது காண கூடிய அடிப்படைகளை கொண்டுள்ளது

இதன் அடிப்படையிலேயே எமது இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி (இடது) திருமதி சிறிமா பண்டாரநாயக்காவின் ஜனதிபதித் தேர்தலில் ஆதரவு அளிக்க முன்வந்துள்ளது.

இவ்வாறு இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி (இ-து) பொதுச் செயலாளர் திரு. கே. ஏ. சுப்பிரமணியம் பத்திரிகைகளுக்கு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

பொது வேலைத்திட்டத்தில் காணப்படும் இனப்பிரச்சினை சார்பாகவும், ஏனைய விடயங்கள் சார்பாகவும், நாமதமும் தட்டிக்கழிப்பும் ஏற்படுமானல் அதை எமது கட்சி எதிர்க்கும்.

அதே வேளை பொது வேலைத் திட்டத்தை நடைமுறைப் படுத்தக் கோரி ஏனைய சக்திகளுடன் இணைந்து நிச்சயம் எமது கட்சிப் போராட்ட இயக்கங்களை நடத்தவும் தவருது

இதை நேரடியாக திருமதி சிறிமா பண்டாரநாயக்காவிடம் எமது தூதுக்குழு தெரிவித்துள்ளது என்றும் அந்த அறிக்கையில தெரிவிக்கப்பட்டுள்ளது (ஓ)

# பிறந்த நாள் வாழ்த்து



## செல்வி கோகிலா தங்கராசா

(12-12-1988)

செல்வி கோகிலா தங்கராசா ஆகிய நான் இன்று 12- 12- 1988 (திங்கள்) எனது பிறந்தநாளைக் கொண்டாடுகின்றேன்.

எனது இந்தப் பிறந்த தினத்தில் 9- 11- 88 அன்று சச்சேரியடியில் ஏற்பட்ட சார்ச்குண்டு வெடிப்பினல் படுகாயமுற்ற எனக்கு, வைத்தியசாலையில் தற்போது சிகிச்சை அளித்துக் கொண்டிருக்கும் வைத்தியர் உட்பட சடமையாற்றும் அனைவருக்கும், மற்றும் Holy Family Convent (Jaffna) அதிபர், ஆசிரியர், சகமாணவர்களுக்கும், நண்பர்களுக்கும், ஆறுதல் அளித்த அனைவருக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

- நன்றி -

75, சச்சேரி நல்லூர் ரோட்,
யாழ்ப்பாணம். (8082)

யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம்

## மின்சாரப் பாவனையாளருக்கான அறிவித்தல்

### புதிய மின்சார விகிதங்கள் 1988

1988 தை மாதம் தொடக்கம் தொகை மின்சார விநியோகத்திற்கான கட்டணங்களை இலங்கை மின்சார சபை அதிகரித்துள்ளதுடன் ஏற்ற விகிதத்தில் மின்கட்டணங்களைப் பாவனையாளர்களிடமிருந்து அறவிடும்படியும் கேட்டுள்ளது நாட்டில் தற்போதைய நிலைமையைக் கருத்திற்கொண்டு இவ்விகித கட்டண உயர்வு பொது மக்களுக்கு அனிசமான வசதிக்குறைவை உண்டு பண்ணும் என உணரப்பட்டு உடனடி நடவடிக்கை எடுப்பதற்கான இயலாமையை அவர்களுக்குத் தெரிவித்திருந்தோம்

என்னும் எமது கோரிக்கை நிராகரிக்கப்பட்டுள்ளது. தற்பொழுது பழைய விகிதத்தில் அனுப்பப்பட்ட தை 1988 முதலான மின் சிட்டைகளுக்கான கூடுதல் கட்டணங்களைத் தற்போது அறவிடப்பட வேண்டி உள்ளது என்பதை மனவருத்தத்துடன் மின் பாவனையாளர்களுக்கு அறிவித்துக் கொள்வதுடன் மறுசீரமைக்கப்பட்ட மின்சிட்டைகள் கிடைக்கப்பெற்றதும் உரிய கட்டணங்களைச் செலுத்தி சபையுடன் ஒத்துழைக்குமாறு விநயத்துடன் கேட்டுக் கொள்கிறேம் புதிய மின்சார விகிதங்களுக்குரியவை நூல் காலக்கிரமத்தில் அனுப்பி வைக்கப்படும்.

இவ்விகித மாற்றம் பிரதம மின்சாரப் பரிசோதகரினல் நிர்ணயிக்கப்பட்டது.

அன்ரன் அல்பிறட்,
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்

7- 12- 1988. (C/485)


# இதோ சிங்கர் வழங்கும் சீமா டயல் தராசு



- பொருளைப் போட்டதுமே எடையை அறியலாம்.
- இரு பக்கமும் தெரியும் எண் சுட்டுக் குறியீடுகள்
- கழற்றக்கூடிய, துருப் பிடிக்காத பொருள் தட்டு.
- துருப்பிடிக்காத உருக்குத் தட்டுத் தாங்கியும் பலமான பிளாஸ்டிக் நிலைச்சட்டமும்.



சீமா பெடஸ்டல் தராசு (மேசையில் வைப்பது)
மொடல் C 6 TP
அளவுத் திறன்-6 கி.கி. X 20 கி. விலை: ரூ. 2,150/-



சீமா டயல் தராசு (தொங்கவிடுவது)
மொடல் C 6 H
அளவுத் திறன்-6 கி.கி. x 20 கி. விலை: ரூ.1,790/-
மொடல் C 15 H
அளவுத் திறன் – 15 கி. கி. X 50 கி. விலை: ரூ. 1,980/-

ஒரு வருடத்திற்குப் பூரண உத்தரவாதம். இலங்கை அளவை-நிறுவைப் பணியகத்தின் அனுமதி முத்திரை பெற்றவை. சிலோன் வேயிங் மெஷின்ஸ் லிமிட்டெட் உற்பத்தி.

Minds/SA/6

சிங்கரின் பராமரிப்புச் சேவை உன்னதமானது. நம்பகமானது. தீவடங்கலானது.

விவசாயப் பிரிவு சிங்கர் மாசற்ற மேன்மை



+
J. M. J

எஸ்.பி.அன்ரனி வழங்கும் வெளிநாட்டுப் பயண ஒழுங்குகள்

CANADA

# மீண்டும் கனடா

அன்புடையீர்!
வாரம்தோறும் இறைவன் அருளைத் துணையாகக் கொண்டு எமது சிறுகுழுக்கள்
கனடாவுக்கு வெற்றிகரமாகப் பயணம்
மேற்கொண்டு வருவது யாவரும் அறிந்ததே.

சமீபத்தில் கனடாவில் நடந்தேறிய தேர்தல் முடிவுகளும் இலங்கைத் தமிழ்மக்களின் நலன்களுக்கு
உகந்ததாக அமைந்ததில் மனமகிழ்ச்சியுடன் அறியத்தருகிறேம்.

எனவே

மேலும்
ஏராளமான தமிழ் அன்பர்கள் எமது பயண ஒழுங்குச் சேவைகளின் மூலம் பயனடையும் வண்ணம்
பரவலான முறையில் பயண ஒழுங்குகளை அமைத்து வருகின்றேம்.
இந்த அரிய சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி உங்கள் வாழ்வை வளமாக்கிக் கொள்ள முந்துங்கள்..

எமது அடுத்த குழுவில் உங்கள் பெயரையும் பதிவு செய்துகொள்ள...
மேலும் விபரங்களை விரிவாக அறிந்து கொள்ள...

உடனே.. நேரில்... தொடர்பு கொள்ளும்படி அன்புடன் அழைக்கிறேன்....
வெளிநாட்டுப் பயண ஒழுங்கமைப்பில் அன்றும் இன்றும் என்றும் நேர்மையும் கண்ணியமும்
தவருமல் சேவை செய்யக் காத்திருக்கும் உங்கள் நண்பன்

உங்கள் பயண அமைப்பாளர்: ☞ **S. P. ANTON**

No. 648 1/3, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
(காப்புறுதிக் கூட்டுத்தாபனத்திற்கு முன்பாக)

(C-893)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# I. E. T.
## TECHNICAL INSTITUTE

[விவேகானந்தா அச்சகத்திற்கு முன்பாக மேல் மாடி]

11 B, STANLEY ROAD, JAFFNA.

★ வயரிங் ★ வைண்டிங்

ஆரம்பம்:- 16 - 12 - 1988

[தபால் மூலமும் கற்பிக்கப்படுகின்றன] C/905)

# ஓராண்டு நினைவஞ்சலி



**திரு இராமலிங்கம் செல்வராசா (ஜேப்)**

(முன்னாள் அதிபரும் தலைமையாசிரியரும் சமாதான நீதிபதியும்)

ஆண்டவன் படைப்பு: 16. 11. 1921 — அழிப்பு: 22. 10. 1987

**திதி: 9. 11. 1988 புதன்கிழமை**

எங்கிருந்தோ இங்கு வந்த கூற்றுவனே
எங்கள் அன்புத் தெய்வத்தின் உயிரை
வீடு பார்க்க வந்த போது வீதியில்
அநியாயமாக பறித்தாயே ஆண்டவனே
மரணத்தை நினைக்கும் முன்னே
ஒரு கணப்பொழுதில் மாய்ந்து விட்டாயோ
எங்கள் தெய்வத்தை நித்தம்,.. நித்தம்
நினைத்து

பிரிவால் வாடும் அன்பின்
மனைவி, மகன், பிள்ளைகள்
மருமக்கள், சகோதர சகோதரிகள்,
பெருமக்கள், உற்றார், உறவினர்,
நண்பர்கள்.

தகவல்:-
திருமதி செ அன்னலெட்சுமி (மனைவி)
முத்தையா செல்வ மாளிகை,
527, கொழும்புத்துறை கிழக்கு,
யாழ்ப்பாணம். (7810)

# 31ம் நாள் நினைவஞ்சலி



**அமரர் திரு. வே- ஐயம்பிள்ளை**

மலர்வு: 17- 8- 1921 — உதிர்வு: 11- 11- 88

எமது குடும்பத்தின் ஒளிவிளக்காய் திகழ்ந்து எம்மை வாழவைத்த பாசம் நிறைந்த அன்புத் தந்தையே! உங்கள் நினைவுகள் என்றும் எங்கள் நெஞ்சை விட்டு அகலாது. உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல கல்வளை விநாயகரை வேண்டுகின்றோம்.

உங்கள் பிரிவால் வாடும்
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், உற்றார்,
உறவினர்கள்.

''கணேஷபதி''
சண்டிலிப்பாய் மத்தி,
சண்டிலிப்பாய் (8259)

# FORTUNA ENTERPRISES
## வெளிநாட்டு வேலை வாய்ப்புக்கள்

(Labour Licence No: 79)

**1. தைவான்**

தொழிற்சாலைத் தொழிலாளர்
(Unskilled Factory Workers)
சம்பளம் — ரூபா 12, 000/ +
இருப்பிட வசதி
(ஆங்கில அறிவு அவசியமானது)
வயது - 22 — 32

**2. குவைத்**

தொழிலாளர் Labourers
சம்பளம் 30 KD — 3300 +
இருப்பிடவசதி

முற்பணம் அறவிடப்படமாட்டாது.

நாடவேண்டிய முகவரி:-
யாழ்ப்பாணப் பிரதிநிதி

**இ. விஸ்வேஸ்வராயன்**
3 ஆம் கட்டை லேன்,
கே. கே. எஸ். வீதி,
கொக்குவில். (C/911)

# 60ஆம் நாள் நினைவஞ்சலி



**பொன்னையா ஸ்ரீதரன் [சஜன்]**

பிறப்பு: 25 04-1963 — அழிப்பு: 14 10-1988

**திதி: 12-12-1988**

அண்ணு நீ எம்மை
வாழவைப்பாய் என இருந்தோம்
கண்ணு யெமைப் பேணி
காத்து வந்தாய் நீயன்றோ!
தீபாவளித் திருநாள் புத்தாடை
நீ வாங்கி வருவாய் எனவே
ஆவலாய் நாமிருக்க
உன்னுயிர் பறித்தனரே
குடும்பத் தலைமகனாய்
நீ விளங்கி எம்மை எல்லாம்
கலங்கரை விளக்கம் போல்
கரைசேர்ப்பாய் என இருந்தோம்
விலங்கெனவே உயிர் பறித்தார்
விதி வழியும் அதுவாச்சே!
சனைப் பலிந்த உன் முகத்தை
காணும் பொழுது துன்பம்
தனைய வாழ்ந்திடவே
யெம்முன்னெம் தழைத்திருந்தோம்
கலைவியராய் வாழும் எங்களை
நீ கடிமணம் செய்து வைத்து
நன்னிலையில் வாழ்வதற்கே
வழி மைப்பாய் என்றிருந்தோம்!
கலைவியராய் நாமிருந்து
கண் கலங்கப் போனாயே?
கற்பனைகள் பலவனை
வைத்துக் கண்டிருந்தோம் அத்தனையும்
சொப்பனமாய் முடிந்ததண்ணு
சோகம் தானை நிலைத்ததண்ணு
அண்ணு என அழைக்க
ஆருளரோ இனியெமக்கு?
அண்ணு நீ எம்மை யெல்லாம்
எப்படித்தான் மறந்தாயே?
உனை மறக்க வழியறியோம்
அழுதாலும் பயனில்லை
இன்யெமக்கு ஆறுதல் தான்
யாரெனவே கலங்குகின்றோம்
உயிர் பறித்தார், உடல்தனில்
இதயமொன்று இருந்திருந்தால்
கலங்கியழும் எம்நிலைமை
கருத்திற் கொண்டிருப்பார்
கண் கலங்கி யாமிருக்க
கடவுளுக்கும் சம்மதமோ?
பெண் பிறந்தகும் துயரது தான்
பிறர்க்கும் மகிழ்வமோ?
எமிதயத் துயரதனை
யாரும் அறியாத இந்நேரம்
உயிரான நீ செல்ல
வெற்றுடலானோம் அண்ணு!
இனியாது செய்திடுவேயம்
இறைவா இதுவுன் விளையாட்டோ?

தந்தை, தாய்,
சகோதர, சகோதரிகள்.

உடுவில் கிழக்கு,
சுன்னாகம். (8254)

# அரசாங்க அறிவித்தல்

சுகாதாரசேவைகள் பிராந்தியபணிப்பாளர் பணிமனை, யாழ்ப்பாணம்.

## 1989 ஆம் ஆண்டிற்கான
## வழங்குநர்களைப் பதிவுசெய்தல்

யாழ்ப்பாணம் கிளிநொச்சி மாவட்டங்களில் உள்ள சுகாதார நிறுவனங்களுக்குத் (வைத்தியசாலைகள் உட்பட) தேவையான பின்வரும் பொருள்களை வழங்கக்கூடியவர்களிடமிருந்து மறுபக்கியில் குறிப்பிடப்படுவோரிடமிருந்து பதிவு செய்வதற்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. காகிதாதிகள்
2. பாவனைப் பொருட்கள் (சர்க்கு, விளக்குமாறு தும்புத்தடி உட்பட)
3. வைத்தியசாலைப் பாவனைக்கான துணிவகைகள்.
4. மரததளபாடங்கள்
5. உருக்குத் தளபாடங்கள்
6. மின்சார உபகரணங்களும் உதிரிப்பாகங்களும்
7. கட்டிடப் பொருட்கள்

**பதிவு செய்யப்படுவதற்குத் தகைமையானோர்**

1. பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள்
2. கூட்டுறவு மொத்த வியாபார ஸ்தாபனங்கள்
3. வேறு பதிவு செய்யப்பட்ட கூட்டுறவுச் சங்கங்கள்.
4. கிராமோதைய சபைகள்.
5. வருமானவரி செலுத்தும் பிரசித்தி பெற்ற நிறுவனங்கள்.

**விண்ணப்பித்தல்**

மேற்படி வழங்குநர்களாகப் பதிவு செய்துகொள்ள விரும்புவோர் உரிய விண்ணப்பப்படிவத்தை கீழ்காணும் விலாசத்திலுள்ள எனது பணிமனையில ரூபா 25/- பதிவுக் கட்டணமாகச் செலுத்திப் பெற்று 16 - 12 - 88 வெள்ளிக்கிழமை காலை 11 00 மணிக்கு முன் எனக்குக் கிடைக்கத்தக்கதாக விண்ணப்பித்தல் வேண்டும். விண்ணப்பங்கள் பதிவுத்தபாலிலோ, அல்லது நேரடியாகவோ அனுப்பபடலாம்.

1989 ஆம் ஆண்டிற்குத் தேவையான பொருட்கள் கொள்வனவு செய்யப்படும் பொழுது கேள்விகள் பதிவுசெய்யப்பட்ட வழங்குநர்களிடமிருந்து மட்டும் கோரப்படும்.

சுகாதார சேவைகள்
பிராந்தியப் பணிப்பாளர்,
யாழ்ப்பாணம்.

சுகாதார சேவைகள் பிராந்திய
பணிப்பாளர் பணிமனை,
59, விக்டோரியா வீதி,
யாழ்ப்பாணம். (C475)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



**அப்பையா அன்னலட்சுமி**

மண்ணுலகில்: 1922 07 04 — விண்ணுலகில்: 1987 11-24

**திதி: 1988-12-12**

ஆண்டொன்று மறைந்ததம்மா! உங்கள் அன்பு உருவம் மறையவில்லை! உங்கள் நினைவு இல்லா நாளில்லை எம் துயர் ஆறாதம்மா எங்கள் எல்லோர் வாழ்விலும் ஒளி விளக்காய் ஒளி ஏற்றிய அன்புத் தெய்வமே! நீங்கள் எங்களைவிட்டு மறைந்து ஓர் ஆண்டல்ல நூறு ஆண்டு ஆனாலும் என்றும் எங்கள் நினைவைவிட்டகலா உங்கள் நினைவுகள். அம்மா திரைகடல் ஓடித் திரவியம் தேடிக் கொண்டு உங்களைப் பார்க்க வர நினைத்து எத்தனை கற்பனையில் கனவு கண்டோம். உங்களைப் பார்க்கத் துடித்த எங்களை மறந்து ஒரு நொடியில் பறந்தீர்களே! உங்கள் அன்பு முகம் பார்க்கத் உங்கள் அன்புமொழி கேட்க துடியாய்த் துடிக்கின்றோம். உங்கள் அன்புமொழி கேட்க எங்களுக்கு கொடுத்து வைக்கவில்லை எங்கள் நலவாழ்வை காண உங்களுக்கு கொடுத்து வைக்கவில்லை. இவ்வுலகில் வாழும்வரை உங்கள் நினைவுடனே வாழ்ந்திருப்போம். உங்கள் ஆத்மா சாந்திபெற இறைவனை வேண்டுகின்றோம்.
ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

உங்கள் பிரிவால் வாடும்
கணவர், பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், உற்றார், உறவினர் (8101)

யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம்

# வீதிவேலைப் பொருட்களுக்கான கூறுவிலை அறிவித்தல்- 1989

03 - 12 - 1988 ஆம் திகதி பத்திரிகைகளில் வெளியான மேற்படி கூறுவிலை அறிவித்தல் தொடர்பான கேள்விபத்திரப் படிவங்கள் 21-12-1988 ஆம் திகதிபுதன்கிழமை நண்பகல் 12 00மணிக்கு முன்னர் எமக்குக் கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைத்தல் வேண்டும் என மாற்றப்பட்டுள்ளதென்பதை அறியத் தருகின்றேன்.

அன்ரன் அல்பிறட்
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

மராமத்துப் பகுதி,
மாநகர அலுவலகம்,
யாழ்ப்பாணம்.
09 - 12– 1988 (C/ 909)

சாவகச்சேரி நகராட்சி மன்றம்

# ஆதனவரி அறிவித்தல்

1988 ஆம் ஆண்டு 4 ஆம் காலாண்டிற்குரிய ஆதனவரியை 30 - 12 - 88 ஆம் திகதி வெள்ளிக்கிழமை நண்பகல் 12 00 மணிக்கு முன்பு இக் காரியாலயத்திற் செலுத்திப் பற்றுச்சீட்டுப் பெற்றுக்கொள்ளும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள். தவறின் இத் திகதிக்குப் பின்னர் செலுத்தப்படும் வரியுடன், வசிப்பிட வளவுகளுக்கும் வெற்றுக் காணிகளுக்கும் பதினைந்து (15%) வீதமும், ஏனைய ஆதனங்களுக்கு இருபது (20%) வீதமும் கூடுதலாகச் சேர்த்து அறவிடப்படுமென்பதைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

1989 ஆம் ஆண்டுக்கான ஆதனவரியை 31- 01-1989 க்கு முன் முழுமையாகச் செலுத்துவோருக்கு பத்துவீத (10%) வரிக்கழிவு வழங்கப்படுமென்பதையும் அறியத் தருகின்றேன்

ஆதனவரி செலுத்தப்படாத வெற்றுக் காணிகளைச் சுவீகரிப்பதற்குச் சபையால் நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது. ஆகவே காணி உரிமையாளர்கள் உடனடியாகச் சபையுடன் தொடர்புகொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

த. நவரத்தினராசா,
செயலாளர்,
நகரசபை, சாவகச்சேரி.

நகரசபை அலுவலகம்,
சாவகச்சேரி.
09 - 12 – 1988. (C/484)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி

**அமரர் திரு வேலுப்பிள்ளை தம்பிஐயா அவர்கள்**

(Retd. Chief Permanent Ways Inspector- Malayan Railways)

தோற்றம்: 17 - 04 - 1902
மறைவு: 12 - 11 - 1988

'' அன்பின் உறைவிடமாய், பாசத்தின் சிகரமாய், எமது குடும்பத்தின் ஒளிவிளக்காய், அன்புக் கதிர்கள் பரப்பி, எமக்கு நல்வழி காட்டிய தெய்வமே! எம்மைவிட்டுப் பிரிந்தாலும் உங்கள் நினைவுகள் என்றுமே விட்டு நீங்காதையா ''

அன்னாரது இறுதிக்கிரியைகளில் கலந்து இறுதி அஞ்சலி செலுத்தியோர்க்கும், பல வழிகளில் உதவி நல்கிய உற்றார், உறவினர்கள் நண்பர்களுக்கும் அனுதாபச் செய்திகள் அனுப்பிய அனைவருக்கும் எமது உளமார்ந்த நன்றியறிதலைத்தெரிவித்துக் கொள்கின்றோம்.

இன்று (12 - 12 - 1988) திங்கட்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக் கிருத்திய நிகழ்ச்சிகளிலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

**மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், உற்றார், உறவினர்.**

'ஜெயமங்களம்'
ஸ்டேசன் வீதி,
கொக்குவில். (8099)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## பொய்யாமொழி

**குறள்:**
நகைவகைய ராகிய நட்பின் பகைவரால்
பத்தடுத்த கோடி உறும்.

**பொருள்:**
(அகத்தில் அன்பு இல்லாமல் புறத்தில்) நகைக்கும் தன்மை உடையவரின் நட்பைவிட, பகைவரால் வருவன பத்துக்கோடி நன்மையாகும்.


# உதயன்

உண்மை - அஞ்சாமை - நடுநிலைமை

இல:- 292/2 நாவலர்வீதி தொலைபேசி 24605
யாழ்ப்பாணம் 22178
12 12 1988 த. பெ. இல 23


## பல்கலைக்கழகம் இயங்கட்டும்

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம் கடந்த சில நாட்களாக இயங்காமல் இருக்கிறது. மாணவர்களுக்குரிய போதனைகளோ, மற்றும் நிர்வாக வேலைகளோ நடைபெறாமல் யாவும் ஸ்தம்பித நிலை அடைந்துள்ளன. மாணவர்கள் வகுப்புக்களைப் பகிஷ்கரித்தது போலவே, உத்தியோகஸ்தர்களும் தமது கடமைகளைப் பகிஷ்கரித்துள்ளனர்.

இந்த வேண்டாத நிலைக்கு, நெருக்கடி நிலைக்கு, முறுகல் நிலைக்கு பல்கலைக்கழகத்தில் கடந்த வாரம் நடைபெற்ற சில விரும்பத்தகாத சம்பவங்களே காரணம்.

குறிப்பாகச் சொல்வதானால் மாணவர்கள் சிலருக்கும், உத்தியோகத்தர்கள் சிலருக்கும் இடையே உண்டான புரிந்துணர்வு இன்மையும், மதிப்புணர்வு இன்மையுமே காரணம் என அறியப்படுகிறது.

முதலாளி—தொழிலாளி, நிர்வாகி—உத்தியோகத்தர், ஆசிரியர்—மாணவர், தலைவன்—தொண்டன், அரசினர்—மக்கள் ஆகிய தரப்பினரிடையே பரஸ்பரம் புரிந்துணர்வும், மதிப்புணர்வும் குன்றிவிட்டால் அல்லது அற்றுப் போய்விட்டால் சம்பந்தப்பட்ட தரப்பாரிடையே அடிக்கடி பிணக்குகள் மூண்டு முறுகல் நிலை தோன்றுவது சகஜமே.

அவ்வாறான வேளைகளில் இருதரப்பாரையும் சமரசம் செய்து வைக்க, அதன் மூலம் நெருக்கடி நிலையைப் போக்க மூன்றாவது பேர்வழி அல்லது சாராரின் பணி—முயற்சி—அவசியமாகிறது.

இலங்கையில் இப்போது இயங்கி வரும் பல்கலைக்கழகம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் ஒன்று மட்டுமே.

கடந்த ஐந்து, ஆறு வருடங்களாக பலவகையான அனர்த்தங்கள், அழிவுகள், நெருக்கடிகளை, தமிழ் மண் கண்டுவிட்ட போதிலும், தமிழ் மாணவர் கல்வி பாதிக்கப்படக்கூடாது என்பதில் பெற்றோர்களும், ஆசிரியர்களும் மிகவும் அக்கறையுடன் இருந்தார்கள் அதனால்தான் பல "தத்துக்களை" யும் தாண்டி யாழ். பல்கலைக்கழகமும் இயங்கி வருகிறது.

நாம் இப்பத்தியில் அடிக்கடி வலியுறுத்தி வரும் கருத்து எந்த இக்கட்டான நிலையிலும் தமிழர்கள் தமது இளசுகளின் கல்வியை, கல்வி வளர்ச்சியை இழந்துவிடக்கூடாது என்பதேயாம்.

ஆகையால் யாழ் பல்கலைக்கழகம் மூடப்படாது பார்த்துக் கொள்ளப்படவேண்டும் அந்த முயற்சியில் ஈடுபடும் எவரும் தாம் வாழும் சமூகத்துக்கு, மண்ணுக்கு முக்கிய கடமை ஒன்றை — பிரதான பணி ஒன்றைச் செய்தவர்களாக மதிக்கப்பட வேண்டியவர்கள்.

யாழ் பல்கலைக்கழகத்தில் உண்டாகியுள்ள பிணக்கைத் தீர்த்து, சமரசத்தை உருவாக்கி நெருக்கடியை நீக்க முயற்சித்து வரும் யாழ் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் பொறுப்பான கடமை ஒன்றைச் செய்ய முன் வந்திருக்கிறது. அதற்காக அதனைப் பாராட்டுகின்றோம்.

அவர்களது சமரச முயற்சி வெற்றியளிக்க வேண்டும் அதற்குரிய ஒத்துழைப்பை மாணவர்களும், உத்தியோகத்தர்களும் வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றோம்.

ஆசிரியர் சங்கத்தினரின் முயற்சி வெற்றி கண்டு அவர்கள் எதிர்பார்ப்பது போலவே, இன்று திங்கட்கிழமை பல்கலைக்கழகம் வழமை போல இயங்கி மாணவர்களுக்குரிய கல்விப் போதனை தடங்கலின்றி நடக்க வேண்டும் என்பதே எமது விருப்பமும் ஆகும். மக்கள் விருப்பமும் அதுவாகவே இருக்கும் என்பதில் ஐயமில்லை.

நடந்து முடிந்த கசப்பான சம்பவங்களை இருசாராரும் மறந்து, மன்னித்து, பரஸ்பரம், புரிந்துணர்வு மதிப்புணர்வு என்பவற்றை வளர்க்கட்டும் கடந்த வாரம் இடம்பெற்றது போன்ற கசப்பான சம்பவங்களுக்கு மீண்டும் இடமளிப்பதில்லை என்று திடசங்கற்பம் செய்யட்டும் இருபகுதியினரும் தூர விலகிச் செல்ல நினைக்காது நெருங்கிப் பழகி நல்லுறவை வளர்க்க உறுதி பூணட்டும்

## பிரதமர் பெனுஸிர் சீனு செல்வார்

இஸ்லாமபாத், டிச 11

பாகிஸ்தான் பிரதமர் பெனுஸிர் பூட்டோ சீன அரசின் அழைப்பை ஏற்றிருக்கிறார்.

சீனாவுக்கு விஜயம் செய்யும் திகதி இன்னமும் நிர்ணயிக்கப்படவில்லை என்று இஸ்லாமபாதத்தில் தெரிவிக்கப்பட்டது.

பிரதமரான பின்னர் திருமதி பெனுஸிர் விஜயம் செய்யவுள்ள முதலாவது நாடு சீனு ஆகும்.

மக்காவுக்கு புனித யாத்திரை மேற்கொண்ட பின்னரே, சீனாவுக்கு விஜயம் செய்யும் திகதியை பிரதமர் பெனுஸிர் நிர்ணயிப்பார் என்று தெரிவிக்கப்பட்டது. (எ)

அதிபர் ஸியா ஆட்சியில்

# கோடிக்கணக்கில் கடன் பெற்றோர் மீது பெனுஸிர் பூட்டோ கடும் நடவடிக்கை!

இஸ்லாமபாத் டிச 11

மறைந்த அதிபர் ஸியா - உல் - ஹக் கின் ஆட்சியில் சிலருக்கு வழங்கப்பட்ட ஆயிரக்கணக்கான கோடி ரூபா கடன்கள் பற்றி பூரண விசாரணை ஒன்றை நடத்தும்படி பாகிஸ்தான் புதிய பிரதமர் பெனுஸிர் பூட்டோ உத்தரவிட்டிருக்கிறார்.

பிரதமரான பின்னர் திருமதி பெனுஸிர் பூட்டோ பிரிட்டிஷ் செய்தியாளர்கள் மத்தியில் பேசினார். அப்போது இதுபற்றி தெரிவித்தார்.

"பிரமாண்டமான கடன்களை எடுத்துவிட்டு அவற்றைத் திருப்பிச் செலுத்தாமல் இருப்பவர்கள் பற்றிக் தனித் தனி விசாரணைகளை நானே மேற்கொள்ள இருக்கின்றேன்"— இப்படி திருமதி பெனுஸிர் பூட்டோ சொன்னார்.

பிரதமர் பதவிக்கு திருமதி பெனுஸிருடன் போட்டியிட்டு, இறுதியில் விட்டுக் கொடுத்து பின்னர் பஞ்சாப் மாநிலத்தின் முதலமைச்சராகியுள்ள இஸ்லாமிய ஜனநாயக முன்னணியின் தலைவர் ஜனுப். நவாஸ் ஷரீப் மட்டும் அரசவங்கிகளில் இருந்து பெற்ற கடன் மட்டும் 400 கோடி ரூபாவுக்கு அதிகம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது

தான் பதவி ஏற்ற போது வெளிநாட்டுச் செலாவணிச் சேமிப்பில் ஒரு வார காலத்துக்குப் போதுமான பொருள்களை இறக்குமதி செய்யக்கூடிய பணம் இருந்தது என்றும் பிரதமர் பெனுஸிர் தெரிவித்தார்.

ஆயுதப் படையினரின் சம்பளத்தை வழங்குவதற்காக கடந்தமாதம் காபந்து அரசு வெளிநாட்டுக்கடனைப் பெற்றது என்றும் அவர் தெரிவித்தார். (எ)

## கோர்பச்சேவ் கவலை

யரவான், டிச. 11

சோவியத் யூனியன் ஜனுதிபதி மிக் செய்ல் கோர்பச்சேவ் ஆர்மேனியாவில் பூகம்பத்தினுல் பாதிக்கப்பட்ட பகுதிகளைப் பார்வையிட்டார்.

உயிர்தப்பியவர்கள் நடந்ததை அதிபரிடம் எடுத்துச்சொன்னுர்கள்.

துன்பங்களை அளவிடமுடியாது என்று திரு. கோர்பச்சேவ் தெரிவித்தார். (எ)

# பாகிஸ்தான் சிறையில் சீக்கியர்களுக்குப் பயிற்சி

புதுடில்லி டிச 11

1983 ஆம் ஆண்டு பாகிஸ்தான் சிறை ஒன்று சீக்கியத் தீவிரவாதிகளுக்கு பயிற்சி கொடுக்கும் முகாமாக பாவிக்கப்பட்டு வருகிறது

இத் தகவலை பாகிஸ்தான் அரசியல் வாதி இம்தியாஸ் அலி தெரிவித்தார்.

அதிபர் ஸியா-உல் ஹக் ஆட்சியில் இவர் சிறை வைக்கப்பட்டார்.

பாகிஸ்தானில் மியால்பூர் சிறையில் நான் காவலில் வைக்கப்பட்டிருந்தேன். நான் இருந்த சமயம் அச்சிறையில் இருந்தவர்களில் அரைவாசிப்பேர் சீக்கியர்கள்.

விசாரித்த போது பயிற்சி பெறுவதற்காக அவர்கள் அங்கு தங்கியுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

ஒரு நாள் என் சந்தேகம் தீர்ந்தது எப்படிஎன்ருல் திடீரென்று ஒரு நாள் அங்கிருந்த சீக்கியர்கள் அனைவரும் எங்கோ ஓர் இடத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

சீக்கியருக்குப் பயிற்சி அளிப்பதை பாகிஸ்தானியர்கள் பெரும்பாலானேர் எதிர்ப்பதில்லை. காரணம் 1971இல் நடந்த பங்களாதேஷ் யுத்தத்தில் இந்தியா செய்ததற்கு பதில் நடவடிக்கை இது என்று அவர்கள் கருதுவதே.

இப்படி ஜனுப் இம்தியாஸ் அலி தெரிவித்தார். (எ)

# அமெரிக்காவில் பட்டங்கள் வழங்கும் போலிப்பல்கலைக்கழகங்கள்

வாஷிங்டன் டிச 11

அமெரிக்காவிலும் போலிப்பட்டங்கள் வழங்கும் பல்கலைக்கழகங்கள் இயங்குவதாகத் தெரிவிக்கப்பட்டது.

அமெரிக்கர்கள் மட்டுமல்ல, வெளிநாடுகளைச் சேர்ந்தவர்களும் போலிப்பட்டங்கள் வழங்கும் பல்கலைக்கழகங்களுக்கும் பலியவாதாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

கலைப்பட்டத்தில் இருந்து மருத்துவ டாக்டர் பட்டம்வரை இப்படி வழங்கப்படுகிறதாம். அமெரிக்க மத்திய புலன் விசாரணைக்குழு (எப் பி ஐ) இது சம்பந்தமாக தீவிர விசாரணைகளை நடத்தி வருகிறது.

பட்டங்கள் வழங்கி வந்த இரண்டு போலிப் பல்கலைக்கழகங்கள் மூடப்பட்டு விட்டன.

அமெரிக்கத் தேசியப் பல்கலைக்கழகம் என்ற பெயரில் அரிசோனு மாநிலத்தில் விலாசம் கொடுத்து இயங்கி வந்த நிறுவனம் ஒன்றும் புளோரிடா மாநிலத்தில் உள்ள விலாசம் ஒன்றில் வட அமெரிக்கப் பல்கலைக்கழகம் என்ற பெயரில் இயங்கி வந்த நிறுவனம் ஒன்றுமே மூடப்பட்டன.

இப் 'பல்கலைக்கழகங்களில்' பட்டம்பெற விண்ணப்பித்தவர்கள் பெரும்பாலானேர் சவூதி அரேபியா, வெனிசூலா ஆகிய நாடுகளைச் சேர்ந்தவர்கள் என்றும் கல்வித்துறையில் பட்டம் பெற அவர்கள் விண்ணப்பித்தனர் என்றும் மத்திய புலனுய்வுத் துறையினர் தெரிவித்தனர். (எ)

# திபெத்தில் ஆர்ப்பாட்டம்; சீனப்படை சுட்டு 2பேர் பலி!

லாகூர் டிச. 11

திபெத்தில் சீன அரசுக்கு எதிர்ப்பானவர்கள் கிளர்ச்சியை நடத்தியவர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது

இதில் இருவர் கொல்லப்பட்டனர் என்று அங்கிருந்து வெளியேறிய வெளிநாட்டுப் பிரசைகள் சிலர் தெரிவித்தனர்.

திபெத்துக்கு பூரண சுதந்திரம் வழங்கப்பட வேண்டும் என்று கோரும் துண்டுப்பிரசுரங்கள் மோதல் நடந்த இடத்தில் காணப்பட்டன என்று அறிவிக்கப்பட்டது

பௌத்த பிக்குகளும் பிக்குணிகளும் தான் இந்த ஆர்ப்பாட்டத்தை நடத்தினர் என்று நவசீன செய்தி ஸ்தாபனம் அறிவித்தது. (எ)

## செலவீனம்

பாகிஸ்தானின் பாதுகாப்புச் செலவீனம் குறைக்கப்படமாட்டாது பாகிஸ்தான் அரசு இதனை நேற்று அறிவித்தது. (எ)

# வயிற்றோட்டம் காரணமாக வருடம் 6,500 பேர் மரணம்

யாழ்ப்பாணம், டிச 12

இலங்கையில் தொற்று நோய் மதிப்பீட்டின்படி வருடா வருடம் 6500 பேர்வரை வயிற்றோட்ட நோயால் இறக்கிறார்கள். இவர்களில் 5500 பேர் வரை ஐந்து வயதுக்கு உட்பட்ட குழந்தைகள்

யாழ் தொற்றுநோய்த் தடுப்பு நிபுணர் டாக்டர் சா. வஜயராசா மேற்கண்டவாறு கூறினர்

சர்வதேச குழந்தைகள் அவசர நிதியத்தின் மூலம் வடபகுதியில் பின்தங்கிய 15 கிராமங்களில் 1110 மலகூடங்களை அமைத்து சுற்றுடல் சுகாதாரத்தை முன்னேற்றும்திட்டம் செயற்படுத்தப்படவுள்ளது

இதுசம்பந்தமாக கேப்பாய் சுகாதார வைத்திய அதிகாரியின் காரியாலயத்தில் மாநாடு ஒன்று நடைபெற்றது

யாழ். பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் டாக்டர் என் கனகசபை தலைமையில நடைபெற்ற இம்மாநாட்டில் சுகாதார வைத்திய அதிகாரிகள், தொற்றுநோய்த் தடுப்பு நிபுணர், தாய் சேய்நல சுகாதார வைத்திய அதிகாரி, சுகாதார கல்விப் போதனுசிரியர், சுகாதார வெளிக்கள உத்தியோகத்தர்கள், மேற்படி கிராமங்களிலுள்ள அரச சார்பற்ற நிறுவனங்களின் தலைவர்கள், தொண்டர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

யாழ் தொற்றுநோய்த் தடுப்பு நிபுணர் டாக்டர் சா வஜயராசா மாநாட்டில் கலந்து கொண்டு மேலும் பேசியதாவது:

இலங்கையில் 50 சதவீத தொற்றுநோய்களாக குடற் தொற்றுநோய்களாக இருக்கின்றன மேல்நாடுகளில 10 சதவீதமாக உள்ளது.

சராசரி ஒரு குழந்தை வருடம் இருமுறைவயிற்றோட்டத்தால் பாதிக்கப்படுகிறது.

வியாதிகளின் மரண வீதத்தில இருதயநோய் முதலாம் இடத்தையும் விபத்து, தற்கொலை இரண்டாம் இடத்தையும் வயிற்றோட்டம் மூன்றும் இடத்தையும் பெறுகின்றன.

1973 இல் வாந்திபேதியும் 1978 இல் சிகெல்லா வயிற்றுளைவும் 1987 இல் போலியோவும் யாழ் பகுதியில வேகமாகப் பரவி நாட்டின் ஏனைய பல பாகங்களுக்கும் பரவின.

யாழ் மாவட்டத்தில் நகர்ப்புறங்களில் 50 சதவீத மலகூட வசதியும் கிராமப்புறங்களில் 30 சதவீத மலசல கூட வசதியுமுண்டு.

குடற் தொற்றுநோய்களை வராமல் தடுக்க தனிநபர் சுகாதாரம், சுற்றுடல் சுகாதாரம் முக்கியமாகப் பேணப்படவேண்டும். குழந்தைகளுக்கு வயிற்றோட்டம் ஏற்படும் போது போதிய நீராகாரமும் உணவும் கொடுபடாததால் வறட்சியும் போஷாக்கின்மையும் ஏற்படுகின்றன. போஷாக்கின்மை காரணமாக மீண்டும் வயிற்றோட்டம் ஏற்படும்.

வயிற்றோட்டம் உள்ள குழந்தைகளுக்கு உணவும் நீராகாரமும்கொடுக்கப்படவேண்டும் இப்படி அவர் கூறினர்.

இக்கருத்தரங்கில் தங்கள் பூரண ஒத்துழைப்பை நல்குவதாக அரசாங்க சார்பற்ற நிறுவனங்கள் சுகாதாரப் பணிப்பாளரிடம் தெரிவித்தனர். (இ 18)

# தெற்கில் கடைகளை மூடினுலும் தண்டனை!

கொழும்பு டிச 12

தென்மாகாணத்தில் வர்த்தக நிலையங்களைத் திறந்தவர்களுக்கும் திறக்காதவர்களுக்கும் 'தண்டனை' வழங்கப்படுகின்றது.

கடைகளைமூடி ஹர்த்தால் அனுஷ்டிக்கும்படி தீவிரவாத இயக்கம் ஒன்று அடிக்கடி அழைப்பு விட்டுவருகிறது.

அதைஏற்காமல் கடைகளைத் திறந்தவர்களுக்கு அந்தத் தீவிரவாதஇயக்கம் தண்டனை விதித்து வந்தது.

இப்போது அந்தத் தீவிரவாத இயக்கத்தின் வேண்டுகோளை ஏற்று கடைகளை மூடிய வர்த்தகர்களுக்குப் போட்டியாக புனைந்துள்ள இயக்கமும் தண்டனை வழங்க ஆரம்பித்திருக்கிறது

அத்தண்டனை வருமாறு:-

கடையைத் மூடாமல் திறந்து வைத்திருக்க வேண்டும்.

அதேவேளை, கடையைத்திறக்காதது தவறு என்று எழுதப்பட்ட அட்டையைக் கழுத்தில் தொங்கவிட்டு மூன்று நாட்களுக்கு கடைவாசலில் நிற்கவேண்டும்.

இதன்படி அந்த வர்த்தகர் கடைவாசலில் நின்றார்.

இது 'பிரா' இயக்கம் என்று தெரிகிறது. ஒ-எ)

# கண்காணிப்புக் குழு யோசனை ஏற்கப்பட்டது

கொழும்பு டிச 12

சார்க் நாடுகளைச் சேர்ந்தவர்களைக் கொண்டு கண்காணிப்புக்குழு ஒன்றை ஜனுதிபதி தேர்தலை அவதானிக்க நியமிப்பது என்ற யோசனையை மூன்று ஜனுதிபதி வேட்பாளர்களும் ஏற்றுக் கொண்டுவிட்டனர்.

தேர்தல் ஆணையாளர் சந்திரானந்த டி சில்வா இதனைத் தெரிவித்தார்.

இதைத் தொடர்ந்து வெளியுறவு அமைச்சு, கண்காணிப்புக் குழுவில் இடம்பெறுபவர்களுடன் தொடர்பு கொண்டுள்ளது

பாகிஸ்தான், இந்தியா, பங்களாதேஷ், நேபாளம் ஆகிய நாடுகளைச் சேர்ந்த பத்துப் பேர் இக்கண்காணிப்புக் குழுவில் இடம் பெறுவர் என்று தெரிகிறது. (உ-எ)

வவுனியா மாவட்ட

# புனர்வாழ்வு வேலைகள் குறித்து ஆராய்வு

வவுனியா, டிச.12

வவுனியா மாவட்டத்தின் புனர்வாழ்வு புனர்நிர்மாண வேலைகள் தொடர்பாக கடந்த புதன்கிழமை வவுனியா செயலகத்தில் முக்கியமான கூட்டம் ஒன்று அரசாங்க அதிபர் அலுவலக மண்டபத்தில நடைபெற்றது.

உலக வங்கி அதிகாரிகளும் புனர்வாழ்வு அமைச்சின் மேலதிக செயலாளரும் முன்னுள் அரசாங்க அதிபருமான திரு. கே. சி. லோகேஸ்வரன் மற்றும் உயர்மட்ட அதிகாரிகளும் இக்கூட்டத்திற்கு கொழும்பில் இருந்து வந்திருந்தார்கள்.

வவுனியா அரசாங்க அதிபர் ரீ லங்காநேசன் மற்றும் பல்வேறு திணைக்களங்களின் தலைவர்கள், உயரதிகாரிகள் ஆகியோர் கலந்து கொண்ட இக் கூட்டத்தில் புனர்நிர்மாண புனர்வாழ்வு வேலைகள் தொடர்பாக ஆராயப்பட்டது (ஐ-164)

# இலக்கணச் சுருக்கம் நூலை வெளியிட ஏற்பாடு

யாழ்ப்பாணம், டிச 12

மாணவர்களின் நலன் கருதி நாவலர் பெருமான் இயற்றிய இலக்கணச் சுருக்கம் நூலை கல்வித் திணைக்கள ஆதரவில் இயங்கி வரும் நாவலர் தர்மகர்த்தா சபை வெளியிடவிருக்கிறது.

கல்வி அதிபர் திரு வெ. சபாநாயகம் தலைமையிற் கூடிய நிர்வாக சபை மேற்படி தீர்மானத்தை எடுத்திருக்கிறது.

குறித்த தீர்மானத்தை வரவேற்றுப் பிரதம கல்வி அதிகாரி கே. சுந்தரசாமி, வட்டாரக் கல்வி அதிகாரி திரு இ. சிவானந்தன் ஆகியோர் உரை நிகழ்த்தினர்கள்.

நிர்வாகசபை உறுப்பினர்களான பண்டிதவித்துவான் இ திருநாவுக்கரசு, ஆசிரியமணி அ. பஞ்சாட்சரம், நாவலர் வித்தியாலய அதிபர் ப. சி ஞானசுப்பிரமணியம் ஆகியோர் குறித்த நூலை 1989 முற்பகுதியில் வெளியிட வேண்டும் என விடுத்த கோரிக்கையும் ஏற்றுக்கொள்ளப்பட்டது. (ஒ)

## சமய சந்நிதிகளில்

### சங்கானையில் இலட்சார்ச்சனை

யாழ்ப்பாணம்.டிச 12

சங்கானை மகாதேவா பிள்ளையார் கோயிலில் இலட்சார்ச்சனை நடைபெற்று வருகிறது

தினமும் காலை 8 மணியளவில் பிள்ளையாருக்கு விசேஷ அபிஷேகமும் பூசைகளும் தீபாராதனைகளும் நடைபெற்று, பெருங்கதைப் படிப்புடன் இலட்சார்ச்சனை நடைபெற்று வருகிறது.

எதிர்வரும் புதன்கிழமை இலட்சார்ச்சனை பூர்த்தி விழா இடம்பெறும்

சங்காபிஷேகமும், திருவுலாக் காட்சியும் இடம்பெறும். (இ)

### பருத்தித்துறையில் சீனி, மாவுக்கு தட்டுப்பாடு

பருத்தித்துறை. டிச. 12

பருத்தித் துறையில் சீனி, மா, மண்ணெண்ணை முதலியவற்றுக்கு பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது

இதனையடுத்து புலோலி பநோகூ சங்கம் பாவனையாளர்களின் அட்டைக்கு 3 கிலோ கோதுமை மாவும் ஒரு கிலோ சீனியும் வழங்கி வருகிறது.

மேலும் உணவு முத்திரை உள்ளவர்களுக்கான அரிசியை உணவுத் திணைக்களம் வழங்கி இருப்பதாகவும் தெரிகிறது.

மின்சார விநியோகம் இன்மையினுல் உள்ளூர் அரிசியின் விலை தினமும் அதிகரித்து வருகிறது. தற்சமயம் அரிசி கொத்து பதினுறுரூபாவாக விற்பனை செய்யப்படுகிறது. (ஒ-118)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மதுரம், குருதைலம்,
திருச்சிறுப்பள்ளி
தடிமல், தலையிடி, வாதம் மற்றும் உளைவு; நோ, நாரிப்பிடிப்பு முதலிய வியாதிகளுக்குக் கைகண்டது.
கிடைக்கும் இடம்:
க செ கைலாசம்பிள்ளை அன் சன்ஸ்
மருந்துச் சரக்கு வியாபாரம்
76, பெரியகடை, யாழ்ப்பாணம்.

# உதயன்

12 - 12 - 1988 திங்கட்கிழமை

கைலாஸ் படை மருந்து
இப்படைமருந்து சொறி, சிரங்கு, சக்கூஸ்பற்று, தேமல், புண், ஊறல்கள் முதலிய சகல விதமான படைகளையும் மாற்றும்
( வெளிப்பிரயோகம் )
கிடைக்கும் இடம்:
க.செ. கைலாசம்பிள்ளை அன் சன்ஸ்
மருந்துச்சரக்கு வியாபாரம்
76, பெரியகடை, யாழ்ப்பாணம்.

## தேர்தல்.....

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

தயான், மூன்னாள் அமைச்சரவைச் செயலாளர் நிமால் முகர்ஜி.

4. நேபாளம்: மத்திய வங்கியின் முன்னாள் கவர்னர் குலசேகர் ஷர்மா, முன்னாள் நிதி அமைச்சுச் செயலாளர் டாக்டர் தேவேந்திரா ராஜ் பண்டே.

சார்க் நாடுகள் குழு உறுப்பினர்கள் இம் மாத 16 ஆம் திகதி கொழும்பு வந்து சேர்வர் என்று அறிவிக்கப்பட்டது.

(இ-எ)

வேகமாக விற்பனையாகின்றன!
ENGLISH TEACHERS EXAMINATION
உதவி ஆங்கில ஆசிரியர் தெரிவுப் போட்டிப் பரீட்சைக்குரிய வழிகாட்டி
அஸ்ரன் வெளியீடு:
விலை ரூபா 47. 50
1982, 83, 84, 87இல் நடைபெற்ற பரீட்சைகளின் மாதிரி வினாவிடைகளையும் உள்ளடக்கியது.
கிடைக்குமிடங்கள்:-
பூபாலசிங்கம் புத்தகசாலை - யாழ்.
ஸ்ரீ லங்கா புத்தகசாலை - யாழ்.
ஸ்ரீ சுப்பிரமணிய புத்தகசாலை - யாழ்.
(C/ 843)

Aug. 1989 Exam.
A/L Science Classes
JAFFNA ACADEMY
க. பொ. த. உயர்தரப் பரீட்சை முடிவுகளின் பின் தொடங்கும் வகுப்புக்கள் Jan. 1989இல் தொடங்கும். பரீட்சை முடிவுகள் தாமதித்து வருவதனால் இவ்வகுப்புகளுக்குச் சேர்க்கப்படுவோர் 4 பாடங்களிலும் ஒரு நாளிலே நடக்கும் பரீட்சையில் தோற்றி அதன் பெறுபேற்றின் முடிவில் தெரிந்து சேர்க்கப்படுவர். காரியாலயத்திலிருந்து பெற்றுக்கொள்ளும் விண்ணப்பப் பத்திரத்தில் விண்ணப்பிக்கவும்.
பிரவேசப் பரீட்சை 3- 1- 1989
— Director
Jaffna Academy
376, Main Street,
Chundikuly.
(8081)

நல்லூர் ப. நோ. கூ. சங்கம்
பதவி வெற்றிடங்கள்
1 கிளைமுகாமையாளர்
சம்பள அளவுத்திட்டம்: 700-950 15X10-20X5
(சங்க எல்லைப் பரப்பில் வசிப்பவர்கள் மட்டும் விண்ணப்பிக்க வேண்டும்)
2 கராச் மெக்கானிக் சாரதி
சம்பள அளவுத் திட்டம்: 905-40X5 - - 50X10-1605
3 மெக்கானிக்
சம்பள அளவுத் திட்டம்: 805-25X7- -35X8-1260
* மேலதிக விவரங்களுக்கு காரியாலய நேரத்தில் சங்கக் காரியாலயத்துடன் தொடர்பு கொள்ளவும்.
* சங்கத்தினால் வழங்கப்படும் விண்ணப்பப் பத்திரத்திலேயே விண்ணப்பித்தல் வேண்டும்.
★ விவரங்கள் கொண்ட விண்ணப்பப் பத்திரம் ஒன்று ரூபா 5/-
* சங்க எல்லைப்பரப்பில் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
விண்ணப்ப முடிவுதிகதி: 24.12.1988
பொதுமுகாமையாளர்,
நல்லூர். ப நோ. கூ. சங்கம்,
திருநெல்வேலி.
(C/486)

நாடாளுமன்றம் கலைக்கப்பட்டபின்

# அவசரகாலச் சட்டம் நீடிப்பு சாத்தியமா?

கொழும்பு, டிச 12

நாடாளுமன்றம் இம்மாதம் 20 ஆம் திகதி கலைக்கப்படும் என்று ஜனாதிபதி ஜெயவர்த்தன ஏற்கனவே அறிவித்து விட்டார் அல்லவா! அப்படியானால் அவசரகாலச் சட்டத்தை மாதா மாதம் எப்படி நீடிப்பது என்று ஒரு பிரச்சினை ஏற்பட்டு உள்ளது

இம் மாதம் 17 ஆம் திகதி சனிக்கிழமை நாடாளுமன்றம் கூடும் போது அவசரகாலச் சட்டநீடிப்புப் பிரேரணை விவாதிக்கப்படவுள்ளது.

காலை 9 மணிக்கு ஆரம்பிக்கும் விவாதம் பிற்பகல் 1 மணிக்கு முடிவடைந்து விடும்.

ஜனவரி மாதம் அவசரகாலச் சட்டத்தை நீடிக்க நாடாளுமன்றம் இல்லை.

அவசரகாலச் சட்டத்தை நீடிக்க நாடாளுமன்றம் ஒவ்வொரு மாதமும் கூட வேண்டும் என்று சட்டம் கூறுகிறது.

அப்படி நீடிக்கப்படாமல் அவசரகாலச் சட்டத்தைக் காலாவதியாக விட்டு பொதுத்தேர்தலை நடத்துவது புத்திசாலித்தனமானது அல்ல என்று பாதுகாப்பு வட்டாரங்கள் அரசுக்குத் தெரிவித்துள்ளன.

இதனைச் சமாளிக்க, நாடாளுமன்றத்தை மீண்டும் ஜனவரி 20 இல் கூட்டி அவசரகால சட்ட நீடிப்புப் பிரேரணையை நிறைவேற்றலாம் என்று அரசு அதிகார பூர்வவட்டாரங்கள் தெரிவித்தன.

கலைக்கப்பட்ட நாடாளுமன்றத்தை அவசர காரியத்துக்காக மீண்டும் கூட்ட அரசமைப்புச் சட்டத்தில் விதி ஒன்று இருப்பதாக அவ்வட்டாரங்கள் தெரிவித்தன.

(இ-எ)

ஸ்ரீமாவோ பதவிக்கு வந்தால்:

## ஒப்பந்தம் ரத்தாகாது;

### தயான் ஜெயதிலக கூறுகிறார்

கொழும்பு, டிச 12

ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டால் இலங்கை இந்திய ஒப்பந்தத்தை ஒருதலைப்பட்சமாக ரத்துச்செய்யப் போவது இல்லை என்று திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா ஈ.பி ஆர். எல் எவ் இயக்கத்துக்கு உறுதி அளித்திருக்கிறார்.

கொழும்பு அரசாங்க லிகிதர் சேவைச் சங்கக் கட்டடத்தில் நடந்த செய்தியாளர் மாநாட்டில் வடக்கு — கிழக்கு மாகாண அமைச்சரான திரு தயான் ஜெயதிலக முன்கண்டவாறு தெரிவித்தார்

அவர் மேலும் சொன்னதாவது:-

சுதந்திரக் கட்சியுடன் ஈ. பி. ஆர். எல். எப். இயக்கம் பேச்சுக்களை நடத்தியது.

அப்போது இலங்கை இந்திய ஒப்பந்தமும் இந்திய அமைதிப் படை இருப்பதும் வெவ்வேறு விஷயம் என்று திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா எம்மிடம் தெரிவித்தார்.

எப்படியாயினும் ஜே வி. பியின் வன்செயலுக்குக் காரணம் இந்திய அமைதிப் படை இருப்பதே எனவும் அமைதிப் படையை வாபஸ் வாங்கும்படி தான் நிர்ப்பந்திக்கப் போவதாகவும் திருமதி பண்டாரநாயக்கா மேலும் சொன்னார்.

''தமிழ் மக்களின் பாதுகாப்புக் குறித்து தமிழர் அமைப்புக்களுடன் பேச்சுக்கள் நடத்தி மாற்றுத் திட்டம் ஒன்றை ஏற்படுத்தும் வரை அமைதிப் படை விலக்கல் இடம் பெறாது.

சுதந்திரக் கட்சியின் தலைமையிலான ஜனநாயக மக்கள் அணியின் தேர்தல் விஞ்ஞாபனம் பேச்சுக்களுக்கு ஆரம்பமாக இருக்கலாமே ஒழிய இனப்பிரச்சினைத் தீர்வின் முடிவு ஆக இருக்காது''— இப்படி திருமதி பண்டாரநாயக்கா தெரிவித்தார் என்று திரு. தயான் ஜெயதிலக சொன்னார்.

(இ-எ)

## இந்திரா....

(1ம் பக்கத் தொடர்ச்சி)

திரா காங்கிரஸ் ஆட்சியை மீண்டும் ஏற்படுத்தவரும் கட்சிகளின் உதவியை இந்திரா காங்கிரஸ் ஏற்கும்.

இந்த உதவியை ஏற்பது என்பது இக்கட்சிகளோடுகூட்டணி வைத்துக்கொள்ளும் என்ற அர்த்தமாகாது

தேர்தலில் தனித்தே போட்டியிடுவது என்ற கட்சியின் நிலையில் எவ்விதக் குழப்பமும் இல்லை.

பிரதேச காங்கிரஸ் சட்டமன்றக் கமிட்டி தமிழ்நாடு சட்டசபையின் 234 ஆசனங்களுக்கான வேட்பாளர்களைத் தெரிவுசெய்யும். ஆனால் இறுதிப்பட்டியலைக் கட்சியின் மத்திய நடாளுமன்றக் குழுதான் முடிவு செய்யும்.

முஸ்லிம் லீக், இந்திய கம்யூனிஸ்ட்கட்சி ஆகியவற்றுக்கு காங்கிரஸ் ஒரு சில தொகுதிகளைக் கொடுக்கலாம். இதுபற்றிக் கட்சியின் நாடாளுமன்றக்குழுதான் முடிவு செய்யும்.

இப்படி திரு. கருணாகரன் தெரிவித்தார்.

(இ-எ)

பிரதமர் கூறுகிறார்

## ஸ்ரீமா தோற்றாலே பாடசாலைகளை மீண்டும் திறக்க வழி ஏற்படுமாம்

கொழும்பு டிச 12

டிசம்பர் 19 இல் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா தோற்கடிக்கப்படவேண்டும். அப்போது தான் நாட்டில் அமைதி திரும்பும்; மீண்டும் பாடசாலைகளைத் திறக்க வழி ஏற்படும்.

இப்படி ஐ. தே. க ஜனாதிபதி வேட்பாளரான பிரதமர் பிரேமதாசா கொலன்னாவையில் நடந்த கூட்டம் ஒன்றில் பேசுகையில் தெரிவித்தார்.

பிரதமர்மேலும்சொன்னதாவது:

நான் ஜனாதிபதியானதும் 15 லட்சம் வீடுகள் கட்டும்திட்டத்தைஆரம்பிப்பேன்.

நான் கொடுக்கும் வாக்குறுதிகள் காப்பாற்றப் படும்.

சிறிமா அரசு ஏற்படுத்திய கஷ்டங்களைக் களைவதிலேயே கடந்த 11 வருட காலமாக எமது அரசுஈடுபட்டது

இப்படிப் பிரதமர் சொன்னார். (இ எ)

### கைதானோர் சூதாட்டக்காரர்

கொழும்பு, டிச 12

மினுவாங்கொட மாவட்டத்தில் ஆண்டியம்பலம் என்னும் இடத்தில் கடந்த வாரம் தீவிரவாத நபர்கள் என்ற சந்தேகத்தில் கைது செய்யப்பட்ட 53 பேரும் சூதாட்டத்தில் இருந்தவர்கள் என்று தெரியவந்துள்ளது.

(இ-எ)

### ரெலோ கண்டனம்

யாழ்ப்பாணம், டிச, 12

இன்றைய நெருக்கடியான காலக்கட்டத்தில் கொலைகள் நடைபெறுவது வேதனைக்குரியது. அத்துடன் கொள்ளைகளைத் தடுக்க முற்பட்ட சில பொதுமக்களும் கொலை செய்யப்பட்டுள்ளனர்.

மக்கள் உண்மையை உணர்ந்து உடன் செயற்படாவிட்டால் இன்னும் மோசமான சூழ்நிலைக்கு நாம் தள்ளப்படுவதைத் தடுக்க முடியாது.

தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தைச் சேர்ந்த வை. கி. சேந்தோழன் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ)

### பணியாற்...

(1 ம் பக்கத் தொடர்ச்சி)

யிட்டார்.

கிராம சேவையாளர்களுக்கும் இதுபோன்று உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

பதவியை இராஜினாமாச் செய்தால் காலியான இடங்களுக்கு புதியவர்களை நியமித்து கச்சேரியை இயங்க வைப்போம் என்றும் மேஜர் ஜெனரல் தெரிவித்தார்.

தீவிரவாதிகளின் பயமுறுத்தல் காரணமாகவே அரசு அதிகாரிகள் அலுவலகம் செல்வதில்லை. (இ எ)

## குடாநாட்டில்....

(1 ம் பக்கத் தொடர்ச்சி)

படுத்துவோம்.

இற்றைக்கு நாற்பது ஆண்டுகளாகத் தமிழ்மக்கள் எதிர்பார்த்து வந்தது திருகோணமலை நகரம்;

இந்த நகரம் எமதுபிரதேசத்தின் தலைநகரமாக்கப்பட்டிருக்கின்றது. இதனை நாம் பயனுள்ள நகரமாகக் கட்டி எழுப்புவோம்.

எல்லோருமாகச் சேர்ந்து ஜனநாயக உரிமைகளை மதிப்பதாக இருந்தால், சுதந்திரமாக அரசியலை மேற்கொள்ளச் சகலவிதமான ஒத்தாசைகளையும் நாம் வழங்கத் தயாராகவுள்ளோம்.

மேலும் எங்களதுநாட்டில் ஜனநாயகம் மக்கள் இடையே உருவாக்கப் பட்டால் தான் ஸ்ரீலங்கா அரசானது எமது மக்களின் ஜனநாயக உரிமைகளை மீறும் போது நாம் போராடுதல் சாத்தியமாகும்;

இப்படி அவர் தெரிவித்தார்.

பத்மநாபா

ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் செயலாளர் நாயகம் திரு. வே. பத்மநாபா பேசுகையில் கூறியதாவது:-

இந்த அரசானது சிறிலங்கா அரசின் வரையறைகளுக்கு உட்பட்டதாக இருந்தாலும் பல வழிகளிலும் அழிந்து போன எமது தேசத்தை கட்டி எழுப்ப, அழிந்து போன எமது மக்களின் வாழ்க்கையை ஒழுங்குபடுத்த ஒரு அமைச்சரவையை ஏற்படுத்தியுள்ளோம்.

எமது ஸ்தாபனம் தொடர்ந்தும் அமைச்சரவையும் அதன் பிரதிநிதிகளையும் கண்காணித்துக் கொண்டிருக்கும்.

மக்கள் எமது அரசில் இருந்து அன்னியப்படாமல் இருக்க வேண்டும்.

அப்பொழுது தான் எமது அடுத்த கட்ட நடவடிக்கைகளான குடியேற்றம் பொருளாதாரம் என்பனவற்றை சரியான முறையில் செயல்படுத்த முடியும்.

[illegible] ஜனநாயக வழிக்கு திரும்பியுள்ள [illegible] என். ரி. எல். எப். இயக்கங்கள் போல ஈரோஸ் இயக்கத்தையும் எங்களுடன் இணைந்து கொள்ளுமாறு அழைக்கின்றோம்.

ஜனாதிபதித் தேர்தலில் யாரை ஆதரிக்க வேண்டும் என பல பொதுமக்கள் என்னிடம் கேள்வி எழுப்பியுள்ளனர்.

எமது மக்களுக்காக தென் இலங்கையில் குரல் கொடுத்துவரும் முற்போக்கு அமைப்புக்களின் சார்பில் போட்டியிடும் எஸ். எல். எம். பி. வேட்பாளரான ஒஸி அபயகுணசேகராவின் கண்சின்னத்துக்கே வாக்களியுங்கள்.

எமது பகுதிகளின் வளர்ச்சிக்கு இது உதவியாய இருக்கும்.

இவ்வாறு திரு பத்மநாபா மேலும் தெரிவித்தார்.

கூட்டத்தில் மட்டக்களப்புப் பொறுப்பாளர் திரு. சிவஞானம், மாகாண சபை அமைச்சர் திரு.சி. எம். கணேசலிங்கம், மாகாண சபைத் தலைவர் திரு ராம் ராஜகாரியர், அமைச்சர் திரு. பெரியதம்பிகிருபாகரன், அமைச்சர் ஜனாப். அபுயூசுப், ஆகியோரும் உரை நிகழ்த்தினார்கள்.

[இ- 10-ϙ

## பெரியகுளம்..

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ரிடமும் கொள்ளையர் தமது கைவரிசையைக் காட்டினர். இக்கொள்ளைச் சம்பவத்தின்போது சுமார் ஐப்பதினாயிரம் ரூபா பணமும் சிறிதளவு நகைகளும் அபகரிக்கப் பட்டன. (இ-94)

# மரண அறிவித்தல்கள்

## திரு. சின்னையா இராசையா

(இளைப்பாறிய மாவட்ட சுகாதாரப் பரிசோதகர்)

அச்சுவேலியைச் சேர்ந்த திரு சின்னையா இராசையா (10- 12- 88)இல் காலமாகி விட்டார். இவர் சிவக்கொழுந்துவின் அன்புக் கணவரும், நந்தகுமார்(Dubai), சந்திராதேவி (U.K), விஜயகுமார்(U.K), இராஜகுமார் (U K), கிருஷ்ணகுமார் (மிருகவைத்தியர்) ஆகியோரின் அன்புத் தந்தையும் நிர்மலா, ஆனந்தராஜா, வசந்தி, சரோஜா, மஞ்சுளா ஆகியோரின் அன்பு மாமனும் ஆவார். ஈமக்கிரியைகள் இன்று (12- 12- 88) பிற்பகல் இராசவீதி இல்லத்தில் நடைபெறும்.

(8263)

## திரு. S. R. ஜோர்ஜ் (ரட்னம்)

பண்டத்தரிப்பை பிறப்பிடமாகக்கொண்டவரும் யாழ் வாசியுமான திரு. S R. ஜோர்ஜ் (ரட்னம்) 10-12 88 இல் காலமானார். இவர் காலஞ்சென்ற திரு. சைமன் - தம்பிராஜா, திருமதி அன்னு தம்பிராஜா ஆகியோரின் மகனும், காலஞ்சென்ற ராணியின் அன்புக்கணவரும், திருமதி ரஞ்ஜினி குலதாஸ், ரஞ்ஜித் (டென்மார்க்) ஆகியோரின் அன்புத் தந்தையும், திரு குலதாஸ் (தாஸ்) (தாஸ்டெக்னிகல்சேவிஸ்) இன் அன்பு மாமனும், ஜதாஷன், ஜனார்த்தனன், ஜலஜன் ஆகியோரின் அன்புப் பேரனும், திரு. ராஜேந்திரம் (சிங்கப்பூர்), வண.பிதா அரசரத்தினம், திரு. இமானுவேல் (இளைப்பாறிய ஆசிரியர் - இங்கிலாந்து) திருமதி அஞ்சலா ஜெயநாதன் (கனடா) திரு. ரூபேட் (துறைமுக அதிகாரசபை, கொழும்பு) ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 14-12-88 புதன் கிழமை காலை 8 மணிக்கு கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு நல்லடக்கத்திற்காக எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்;
திரு. குலதாஸ்
18, நாலாம் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம்.

(C/913)

## திரு. சின்னத்தம்பி வல்லிபுரம்

உடுவிலைச் சேர்ந்த ''பவளரதம்'' உரிமையாளர் திரு சின்னத்தம்பி வல்லிபுரம் (ஞானப்பிரகாசம்) 10-12-88இல் காலமாகிவிட்டார். இவர் சின்னத்தங்கச்சியின் அன்புக் கணவரும், திருமதி புஷ்பமலர். திருமதி பவளமலர், திரு. ஜெயராஜா, (சவூதிஅரேபியா) திரு. புஸ்பராஜா ஆகியோரின் அன்புத் தந்தையும், திரு. வின்சென்ட் (மக்கள் வங்கி, யாழ்ப்பாணம்), திரு. நா. தவராசா (அரசாங்க ஒப்பந்தகாரர்), திருமதி ஜெயசீலி (குஞ்சு), திருமதி சமலாதேவி ஆகியோரின் அன்பு மாமனும், வாலமுத்து, வைரமுத்து, பொன்னுத்துரை, தங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரரும், றமீலா, கொலின்ஸ், அஜிதா, முகுந்தன், பிரிந்தினி, ஜெயந்தன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார். அன்னாரின் பூதவுடல் 12—12—88 திங்கட்கிழமை பகல் 11-00 மணிக்கு அவரின் இல்லத்திலிருந்து மல்வத்தை சேமக்காலைக்கு நல்லடக்கத்திற்காக எடுத்துச் செல்லப்படும் இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: B. வின்சென்ட்
மக்கள் வங்கி, யாழ்ப்பாணம்.

(8109)

## முருகேசு கிருஷ்ணபாலன்

கந்தர்மடத்தைப் பிறப்பிடமாகவும் கிளிநொச்சியை வசிப்பிடமாகவும் கொண்ட கிருஷ்ணபாலன் 11-12-88 இல் அகால மரணமானார். இவர் காலஞ்சென்ற முருகேசு கனகேஸ்வரியின் அன்புப் புதல்வனும், சிவபாலன் (யாழ் பல்கலைக்கழகம்), தேவபாலன் (ஜேர்மனி), தவபாலன் (ஆசிரியர் சென் பற்றிக்ஸ்) குணபாலன் (லண்டன்), சந்திரபாலன் (சுவிற்சலாந்து), ஜீவசந்திரமணி சந்திரபாலன் (சுவிற்சலாந்து), நந்தபாலன் (நோர்வே), விஜயபாலன் (யாழ் இந்துக்கல்லூரி) ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஞானதேசிகன் (ஆசிரியர் சென் சேவியர் நுவரெலியா) ராஜேஸ்வரி, ராஜகுலதேவி (ஜேர்மனி) கோசலா (ஆசிரியை) கௌரி (லண்டன்) ஆகியோரின் அன்பு மைத்துனரும் சுகாஜினி, சிவகரன், தயாளினி, தனுசலா, துளசா, முகந்தன் ஆகியோரின் அன்புச் சித்தப்பாவும் மயூரனின் அன்பு மாமனும் ஆவார்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளும்படி வேண்டிக் கொள்ளுகின்றோம். ஈமக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்!
திருமதி கனகேஸ்வரி முருகேசு

(8113)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிக்கேஷன்ஸ் [பிறைவேட்] லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2, இலக்கத்தில் உள்ள அவர்களது அச்சகத்தில் 12- 12- 1988 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது. Printed and Published by New Uthayan Publications (pvt) Ltd 292/2 Navalar Road, Jaffna on Monday 12th December 1988

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org